# சிலாங்கூர் இன்று

இலவசம்

www.selangorkini.my Media_Selangor SelangorTV selangortv.my MediaSelangor SMART SELANGOR

SELANGOR

திருவள்ளுவர் ஆண்டு 2054 / சோபகிருது வருடம் மாசி மாதம் / பிப்ரவரி 02/2024 / FEBRUARY 02/2024


## அல்-சுல்தான் அப்துல்லாவின் நீதி மற்றும் விவேகத்தை மக்கள் உணர்ந்தனர்

**கோலாலம்பூர்-**

தனது ஆட்சிக் காலத்தில் அமைதி மற்றும் சுபிட்சத்தை அனைத்து மக்களும் அனுபவிப்பதை உறுதி செய்வதற்காக அல்-சுல்தான் அப்துல்லா ரியாத்துடின் அல்-முஸ்தாபா பில்லா ஷா கடைபிடித்த நீதி மற்றும் விவேகத் திறனை உணர்வதற்குரிய வாய்ப்பினை அனைத்து மக்களும் பெற்றிருப்பர் எனத் தாம் நம்புவதாக பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.

மக்கள் நலன் காக்கும் விஷயத்தில் மாட்சிமை தங்கிய பேரரசரும் ராஜா பெர்மைசூரி துவாங்கு அஜிசா அமினா மைமுனா இஸ்கந்தாரியாவும் காட்டிய அக்கறை மன்னருக்கும் மக்களுக்கும் இடையிலான வழக்கமான எல்லைகளைத் தாண்டியதாக இருந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து நீடித்து வந்த நிச்சயமற்ற அரசியல் சூழல், **கோவிட்**-19 பெருந்தொற்றின் தாக்கம், பொருளாதார பாதிப்பு ஆகியவை காரணமாக நாடு நிச்சயமற்ற மற்றும் பொருளாதார தாக்கத்தை எதிர்நோக்கியிருந்த காலக்கட்டத்தில் மாமன்னர் அரியணை அமைந்தார்.

எனினும், மக்கள்மயப் பண்புகள், எந்த சூழ்நிலையிலும் மக்கள் நலனுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்ற உணர்வு ஆகியவை காரணமாகஆட்சிகாலத்தில்தனக்குஉரியபணிகளை மாமன்னர் முழுமையாக நிறைவேற்றினார் எனவும் அன்வார் சொன்னார்.

நாட்டின் **16வது** மாமன்னர் பதவி முடிவுக்கு வருவதை முன்னிட்டு இங்குள்ள தங்கும் விடுதி ஒன்றில் நடைபெற்ற அரச விருந்தில் உரையாற்றிய போது அவர் இவ்வாறு கூறினார்.

தனது ஆட்சிக் காலத்தின் போது மாட்சிமை தங்கிய பேரரசர் புதிய வரலாற்றுச் சாதனையைப் படைத்ததோடு மூன்று முறை பிரதமர் மாற்றம் ஏற்பட்ட போது சிறப்பான முறையில் அப்பிரச்சனைகளைக் கையாண்டு நாட்டை சரியான தடம் நோக்கி வழி நடத்தினார் எனவும் அவர் புகழாரம் சூட்டினார்.



விரிவான செய்திக்கு பக்கம் 4

## மாநிலம் முழுவதும் பல புதிய தொழில் பேட்டைகள்

**ஷா ஆலம்-**

முதலீட்டாளர்கள் மற்றும் தொழில்துறையினரின் கோரிக்கைகளுக்கு ஏற்ப இந்த ஆண்டு மாநிலம் முழுவதும் மேலும் பல புதிய தொழில் பேட்டைகள் உருவாக்கப்படும்.

இத்திட்டத்தின் வழி சிலாங்கூருக்குப் பல நன்மைகள் கிட்டும், அவை விமான நிலையம், பெரிய துறைமுகம் **(கிள்ளான்)**, நெடுஞ்சாலைகள் மற்றும் கிழக்கு கடற்கரை இரயில் பாதை **(ECRL)** போன்றவை ஆகும் என முதலீடு ஆட்சிக்குழு உறுப்பினர் இங் ஸீ ஹான் கூறினார்.

“முதல் சிலாங்கூர் திட்டத்தில் உள்ள திட்டங்களுக்கும், குறிப்பாக சபாக் பெர்ணம் பகுதி மற்றும் தெற்கு சிலாங்கூர் ஒருங்கிணைந்த வளர்ச்சி பகுதியின் மேம்பாட்டிற்கு நாங்கள் முன்னுரிமை அளித்து வருகிறோம்,” என்று அவர் கூறினார்.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களை மாநிலத்திற்கு வரவேற்கும் வகையில் முதலீட்டுத் தொழிலை மாநில நிர்வாகம் தீவிரமாக ஊக்குவித்து வருவதாகவும் அவர் கூறினார்.

“அனைத்து செயல்முறைகளும் சீராக இயங்கும் வகையில் கண்காணிக்கப்படும். சிக்கல் இருந்தால், முதலீட்டாளர்களின் நுழைவுக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் அவை விரைவாக தீர்வு காணப்படும்” என்று அவர் கூறினார்.

கடந்த ஆண்டு நவம்பரில், **1,506** உற்பத்தித் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்த பிறகு, இந்த ஐந்து ஆண்டுகளில் மாநிலம் **RM88.88** பில்லியன் முதலீட்டு மதிப்பை ஈட்டியதாக ஸீ ஹான் தெரிவித்தார்.

**2018** முதல் கடந்த ஜூன் வரை பதிவு செய்யப்பட்ட மொத்தத்தில் **53 பில்லியன் ரிங்கிட்** வெளிநாட்டு மூலதன முதலீடு ஆகும். மீதமுள்ள **RM35.88 பில்லியன்** உள்ளூர் மூலதனம் மற்றும் அதன் மூலம் **95,610** வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.



# இவ்வாண்டு ஆலயங்களுக்கான முதல் கட்ட மானியமாக

# 47 கோவில்களுக்கு வெள்ளி 535,000 வழங்கப்படது

**கோம்பாக் பத்துமலை-**

சிலாங்கூரில் மத நிகழ்வுகளின் பாதுகாப்பான மற்றும் இணக்கமான கொண்டாட்டத்தை உறுதி செய்வதற்கான தனது உறுதிப்பாட்டை சிலாங்கூர் மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார், குறிப்பாக பத்துமலை தைப்பூசத்தில் பிரமாண்டமான கொண்டாட்டமே இதற்கு சான்றாகும் என்றார்.

பத்துமலை ஸ்ரீ சுப்பிரமணியர் சுவாமி கோவிலில் நடைபெற்ற மாநில அளவிலான தைப்பூச விழாவின் போது இவ்வாண்டு ஆலயங்களுக்கான முதல் கட்ட மானியமாக வெள்ளி **535,000** த்தை **47** கோவில்களுக்கு எடுத்து வழங்கினார்.

கடந்த **2008** ஆண்டு மாநிலத்தில் மக்கள் கொண்டு வந்த ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து சிலாங்கூர் மாநில அரசு ஆண்டுதோறும் ஆலயங்களுக்கு மானியம் வழங்கி வருகிறது.

**அந்நிகழ்வில் நிதியை பெற்றுக் கொண்ட ஆலயங்கள் வருமாறு;-**

| | ஆலயங்களின் பெயர்கள் |
|---|---|
| 1. | ஸ்ரீ சுப்ரமணியர் பெர்ஜுந்தை டின் பத்தாங் பெர்ஜுந்தை ஆலயம் |
| 2. | கோலா சிலாங்கூர் ஸ்ரீ சுப்ரமணியர் சுவாமி ஆலயம் |
| 3. | ரவாங் ஸ்ரீ மஹா மாரியம்மன் ஆலயப் பக்தர்கள் சங்கம் |
| 4. | சுங்கை சிடு தேவி ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயப் பக்தர்கள் சங்கம், பந்திங் |
| 5. | ஸ்ரீ மகா மாரியம்மன் கோவில், பண்டமாறன் ஜெயா |
| 6. | ஸ்ரீ பாலதண்டாயுதபாணி தேவஸ்தானம், காப்பார் நிர்வாகக் குழு |
| 7. | ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயப் பக்தர்கள் சங்கம், சுங்கை பூலோ |
| 8. | ஸ்ரீ விநாயகர் கருமாரியம்மன், கம்போங் சுங்கை ரம்பாய், பத்தாங் பெர்ஜுந்தை |
| 9. | தாமான் ஸ்ரீ மஞ்சா மீனாட்சி சொக்கநாதர் ஆலயப் பக்தர்கள் சங்கம், பெட்டாலிங் ஜெயா |
| 10. | பண்டார் பூச்சோங் ஜெயா ஸ்ரீ மகா மாரியம்மன் தேவஸ்தான பக்தர்கள் சங்கம் |
| 11. | ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம், பண்டார் கின்றாரா 1, நிர்வாகக் குழு |
| 12. | ராசா அருள்மிகு ஸ்ரீ தண்டாயுதபாணி ஆலயப் பக்தர்கள் சங்கம், உலு சிலாங்கூர் |
| 13. | அலாம் இம்பியான் ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயப் பக்தர்கள் சங்கம், ஷா ஆலம் |
| 14. | கிள்ளான் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயப் பக்தர்கள் சங்கம் |
| 15. | ஸ்ரீ மகா மாரியம்மன், புக்கிட் குளோ தோட்டம், ஜெராம் |
| 16. | சங்கிலி கருப்பன் கம்போங் நியோர் ஆலயப் பக்தர்கள் சங்கம் |
| 17. | ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலய நிர்வாகம், சுங்கை காப்பார் தோட்டம் |
| 18. | புக்கிட் தாலாங் ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயப் பக்தர்கள் சங்கம் |
| 19. | ஸ்ரீ காட்டு ராஜா வேங்கை முனி ஆலயப் பக்தர்கள் சங்கம், ராஜா மூசா கோலா சிலாங்கூர் தோட்டம் |
| 20. | மதுரை வீரன் ஆலயப் பக்தர்கள் சங்கம், ராஜா மூசா கோலா சிலாங்கூர் தோட்டம் |
| 21. | ஸ்ரீ முத்துமாரியம்மன் பக்தர்கள் சங்கம், கம்போங் சுங்கை தெராப் தஞ்சோங் காராங் |
| 22. | கோம்பாக் ஸ்ரீ மகா வண்ண முனிஸ்வரன் ஆலயப் பக்தர்கள் சங்கம் |
| 23. | பத்து 14 ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலய நிர்வாகச் சங்கம், பூச்சோங் |

| | ஆலயங்களின் பெயர்கள் |
|---|---|
| 24. | ஸ்ரீ மகா முனியாண்டி ஆலயப் பக்தர்கள் சங்கம், பண்டார் புக்கிட் ராஜா, கிள்ளான் |
| 25. | சிலாங்கூர் ஸ்ரீ மகா முனியாண்டி பக்தர்கள் சங்கம் |
| 26. | தாமான் டேசா குண்டாங் தேவ ஸ்ரீ கணேசன் ஆலயப் பக்தர்கள் சங்கம் |
| 27. | ஸ்ரீ மகா கருமாரியம்மன் ஆலய இந்து சங்கம், காஜாங் |
| 28. | ஸ்ரீ காளிகாம்பாள் கமடேஸ்வரர் ஆலயப் பக்தர்கள் சங்கம், ஈபோர் தோட்டம், ஷா ஆலம் |
| 29. | தேவ ஸ்ரீ மேல்மலையனுர் அங்காள பரமேஸ்வரி அம்மன் ஆலயப் பக்தர்கள் சங்கம், மெர்பாவ் ஜெராம் தோட்டம் |
| 30. | ஸ்ரீ மகா மகேஸ்வரி காளியம்மன் ஆலயப் பக்தர்கள் சங்கம், கம்போங் பூங்கா மெலோர், பத்து 14 பூச்சோங் |
| 31. | போர்ட் கிள்ளான் ஸ்ரீ மகா காளியம்மன் ஆலயப் பக்தர்கள் சங்கம் |
| 32. | ஸ்ரீ தேவஸ்தானம் அருள்மிகு ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயப் பக்தர்கள் சங்கம், ஷா ஆலம் |
| 33. | அருள்மிகு மகா மாரியம்மன் ஆலயப் பக்தர்கள் சங்கம், கோல்பில்ஸ் சுங்கை பூலோ தோட்டம் |
| 34. | கிள்ளான் ஸ்ரீ பகவதி ஞானாநந்த கிரி ஆலயப் பக்தர்கள் சங்கம் |
| 35. | சர்வதேச கிருஷ்னர் வழிப்பாட்டு மையம் |
| 36. | அருள்மிகு ஸ்ரீ சுப்பரமணியர் ஆலயம், கெர்லிங், உலு சிலாங்கூர் |
| 37. | ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், தெலுக் பூனுட், பந்திங் |
| 38. | ஜாலான் மேரு கிள்ளான் சித்தி விநாயகர் ஆலயம் |
| 39. | சுப்ரமணியர் ஆலய நிர்வாகச் சங்கம் |
| 40. | தேவி அருள்மிகு ஸ்ரீ நாகக்காளியம்மன் ஜெய் முனிஸ்வரர் ஆலயப் பக்தர்கள் சங்கம், பூச்சோங் |
| 41. | கிள்ளான் தேவி ஸ்ரீ கருமாரியம்மன் ஆலயப் பக்தர்கள் சங்கம் |
| 42. | ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலய நிர்வாகம், தொங்கா மோரிப் |
| 43. | தாமான் ஸ்ரீ மூடா ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலய நிர்வாகம், ஷா ஆலம் |
| 44. | சிலாங்கூர் ஸ்ரீ துர்கை அம்மன் பக்தர்கள் சங்கம் |
| 45. | ஸ்ரீ மகா மாரியம்மன் தேவஸ்தான பக்தர்கள் சங்கம் ஸ்ரீ கெம்காங்கான் |
| 46. | செக்ஷன் 19 ஷா ஆலம் ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலய நிர்வாகம் |
| 47. | ஷா ஆலம் சீதா ராமா பக்தர்கள் சங்கம் |

# 7 லட்சம் பெறுநர்களுக்கு (சாரா) 2024 ல்

# RM70 கோடி ஒதுக்கீடுகள்



**கோலாலம்பூர்-**

இந்த ஆண்டு சும்பங்கன் அசாஸ் ரஹ்மா **(சாரா)** என்னும் உதவித் திட்டமானது 7 லட்சம் பெறுநர்களின் அடிப்படை தேவைக்கு உதவும் வண்ணம் **RM70** கோடி வெள்ளியை ஒதுக்கிட்டுள்ளது.

கடந்த ஆண்டு **RM13** கோடி ஒதுக்கீட்டில் **210,000** பெறுநர்களுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு **RM70 கோடியாக** அதிகரிக்கப்பட்டது என்பது ஐந்து மடங்கு அதிகரிப்பாகும்.

பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம், அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுகளினால் அதிகம் பாதிக்கப் படுபவர்களை இலக்காக கொண்டு மானிய உதவியாக " சாராவை "மேம்படுத்துவதாக கூறினார்.

"மலேசியப் பொருளாதாரத்தின் மாற்றம் என்பது மிகவும் பாதிக்கப் படக்கூடியவர்களை உயர்த்துவதில் தொடங்குகிறது. சாரா திட்டத்தின் மேம்பாடுகள் சமத்துவமின்மையைக் குறைப்பதற்கும், மடாணி பொருளாதாரக் கட்டமைப்பு படி ஒரு அக்கறை மிக்க சமுதாயத்தை உருவாக்குவதற்கு முதல் படியாகும்," என்று அவர் நேற்று ஒரு அறிக்கையில் தெரிவித்தார்.

ஜனவரி **22** முதல் படிப்படியாக செயல்படுத்தப்படும் சாரா, மலேசியாவின் பொருளாதார ரீதியாக மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது மற்றும் மடாணி பொருளாதார கட்டமைப்பின் அடித்தளமாக செயல்படும் சமத்துவக் கொள்கைக்கு ஏற்ப உள்ளது.

இத் திட்டத்தின் மேம்பாடுகளில், கடந்த ஆண்டு பரம ஏழைகளுடன் ஒப்பிடும்போது, , **2023** இல் **RM600** யாக இருந்த உதவியை **RM1,200** வரை அதிகரிப்பது, பரம ஏழைகளிலிருந்து உதவிகளை ஏழைகளுக்கும் விரிவுபடுத்துதல் போன்ற மேம்பாடுகள் அடங்கும்.

"கடந்த ஆண்டு "சாரா திட்டம்" ஊக்கமளிக்கும் ஆதரவு பெற்றதைத் தொடர்ந்து, நாடு முழுவதும் 424 ஆக இருந்த **(2023 இல்)** பங்குபெறும் சில்லறை விற்பனையாளர்கள் நெட்வொர்க்கை **(ஜனவரி 17 முதல்) 515** ஆக அரசாங்கம் விரிவுபடுத்தியுள்ளது" என்று அன்வார் கூறினார்.

சாரா திட்டத்தைப் பற்றிய தகவல்களைத் தேடும்போது பொறுப்பற்ற தரப்பினரின் மோசடி வலைதள இணைப்புகள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறும் நிதி அமைச்சகம் பெறுநர்களுக்கு நினைவூட்டியது.

## குடியுரிமை இல்லாத மாணவர்கள் பிரச்சனைக்குத் என்ன தீர்வு

**கோலாலம்பூர்-**

குடியுரிமைதொடர்பானஆவணங்கள் இல்லாத காரணத்தால் கல்வியைத் தொடர்வதில் சிக்கல்களை எதிர்நோக்கும் மாணவர்களின் குடும்பத்தினருடன் கல்வி அமைச்சு சந்திப்பை நடத்தியது.

கடந்த டிசம்பர் மாதம் **28ஆம்** தேதி நெகிரி செம்பிலான் கல்வித் துறை நடத்திய கூட்டம், சம்பந்தப்பட்ட மாணவர்கள் வழக்கம் போல் பள்ளிக்குச் செல்வதற்கு ஏதுவாக இப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதை நோக்கமாகக் கொண்டது என்று அமைச்சு இன்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தது.

பள்ளியில் மாணவர் பதிவு தொடர்பான நிர்வாகத்தின் அம்சங்களில் உதவ நெகிரி செம்பிலான் மாநில கல்வி இலாகா உறுதி பூண்டுள்ளது. இச்சந்திப்பு இணக்கமான சூழ்நிலையில் இடம்பெற்று சாதகமான முடிவுகளை எட்டியுள்ளது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெற்றோர் திருமணத்தைப் பதிவு செய்யத் தவறியது மற்றும் **2013** இல் அவர்கள் விவாகரத்து செய்தது ஆகிய காரணங்களால் எழுந்த குடியுரிமை ஆவணச் சிக்கல்களால் **10** வயது மாணவர் இந்த மார்ச் மாதம் நான்காம் வகுப்பைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டது.

அந்த மாணவர் முன்பு செனாவாங், தாமான் ஸ்ரீ பாகி தேசியப் பள்ளியில் மூன்றாம் வகுப்பு வரை படித்தார். குடியுரிமை இல்லாததால் பள்ளிக்குச் செல்ல வருடத்திற்கு **120** வெள்ளியை அக்குடும்பம் செலுத்த வேண்டியிருந்தது.

எனினும் கல்வியமைச்சின் புதியக் கொள்கை காரணமாகக் கடந்த மார்ச் மாதம் தொடங்கிய பள்ளித் தவணையின் போது அம்மாணவர் பள்ளிப்படிப்பைத் தொடர முடியாது என்று பள்ளி தெரிவித்தது.



## பரம ஏழை மற்றும் ஒற்றை தாய்மார்களுக்கு நம்பிக்கை ஊட்டுகிறது

**ஸ்ரீ கெம்பாங்கான்-**

கோத்தா கெமுனிங் சட்டமன்றம் பரம ஏழை **(B 40 குழு)** சேர்ந்தவர்கள் மற்றும் ஒற்றை தாய்மார்கள் உட்பட சுமார் **10** பங்கேற்பாளர்கள், குரோ **(Grow)** எனப்படும் வணிக பயிற்சித் திட்டத்தின் கீழ் தையல் துறையில் ஆறு மாத தொழில் முனைவோர் படிப்பை வெற்றிகரமாக முடித்துள்ளனர்.

சிலாங்கூர் இந்தியர் தொழில் முனைவோர் மேம்பாடு **(சிந்தம்)** நிர்வாக அதிகாரி ஜான் பெர்னாண்டஸ், பாடத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு **RM30,000** ஒதுக்க பட்டதாகவும், பாடத் திட்டத்தை முடித்த பிறகு பங்கேற்பாளர்களுக்கு உபகரண உதவிகளை வழங்குவதாகவும் கூறினார்.

"பங்கேற்பாளர்கள் இந்த வாய்ப்பை முழுமையாக பயன்படுத்தி பயனடைவார்கள், அவர்களின் வாழ்க்கையும், குடும்பங்களையும் மேம்படுத்த முடியும் என்று நாங்கள் நம்புகிறோம், நீங்கள் கற்றுக் கொண்டதைப் பயிற்சி செய்யுங்கள் என, இன்று சாய் ராணி தையல் மையத்தில் நடந்த குரோவின் நிறைவு விழாவுக்குப் பிறகு அவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது எனக் கூறினார்.

பங்கேற்பாளர் பி. சுகுணா, **39**, **(Grow)** க்ரோ தனது சொந்த தையல் கடையைத் திறக்க தன்னம்பிக்கை அளித்துள்ளதாக கூறினார்.

"சும்மா பொழுதுபோக்காக தொடங்கி, விரும்பும்போது தையல் தைப்பது, இப்போது பணமீட்டும் சொந்தத் தொழிலாகும் என்று யார் நினைத்திருப்பார்கள்? எனது நீண்ட நாள் கனவு நனவாகியுள்ளது.

நான்கு குழந்தைகளைக் கொண்ட குடும்பத்தில் தனி ஒரு தாயான பி. ராஜேஷ், **44**, மருத்துவ உதவியாளராகவும் தனது மற்ற வேலையுடன், பெண்களுக்கான சாதாரண கால் சட்டைகள் தைத்து விற்பதன் மூலம் இப்போது வருமானம் ஈட்ட முடியும் என்கிறார்.

சிலாங்கூர் இந்தியர் தொழில் முனைவோர் மேம்பாடு **(சித்தம்)** வணிகப் பயிற்சித் திட்டம் இன்றி **(Grow)** இத்தொழிலை தான் எண்ணிப்பார்த்திருக்க முடியாது என்றார்.

சிலாங்கூர் இந்தியர் தொழில் முனைவோர் மேம்பாடு **(சித்தம்)** வணிகப் பயிற்சித் திட்டத்தில் **(Grow)** பங்கேற்பாளர் பி. ராஜேஷ், **44**.

**40** வயதான ஒரு குடும்ப பெண் ஆர். குணசுந்தரி, தற்போது வீட்டில் இருந்தே துணிகளுக்கு ஒட்டு போடுவது, மடித்து தைத்தல் அல்லது ஆடைகளுக்கு சிறு மாற்றங்களை செய்யும் சிறிய அளவில் தொழிலைத் தொடங்கி உள்ளதாகக் கூறினார்.

சிலாங்கூர் இந்தியர் தொழில் முனைவோர் மேம்பாடு **(சித்தம்)** வணிகப் பயிற்சித் திட்டத்தில் **(Grow)** பங்கேற்பாளர் ஆர். குணசுந்தரி, **40**.

சித்தம் செப்டம்பர் **2019** இல் தொடங்கப்பட்டது, வழிகாட்டுதல், மானியங்கள் மற்றும் வணிக உபகரணங்களை வழங்குவதன் மூலம் ஆர்வமுள்ள இளம் வணிகர்களை மேம்படுத்துவதை குறிக்கோளாக கொண்டு சித்தம் செயல்படுகிறது.

# பேரிடர் பணிகளுக்கு வெ.10 லட்சம் ஒதுக்கீடு

**புத்ராஜெயா-**
பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக இவ்வாண்டில் **10 லட்சம்** வெள்ளியை எம்.பி.ஐ. எனப்படும் மந்திரி பெசார் கழகம் ஒதுக்கியுள்ளது.

வெள்ளம், நிலச்சரிவு, புயல், தீ மற்றும் சாலை விபத்துகள் போன்ற பேரிடர்களில் பாதிக்கப்படுவோருக்கு இந்த நிதியிலிருந்து உதவிகள் வழங்கப்படும் என்று எம்.பி.ஐ. நிறுவன சமூகக் கடப்பாடு மற்றும் தகவல் தொடர்புத் தலைவர் அகமது அஸ்ரி ஜைனால் நோர் கூறினார்.

இந்த உதவி வெள்ளம் போன்ற பேரிடர்களுக்கு மட்டும் அல்லாது சாலை விபத்துக்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, குறிப்பாக போதிய வருமானம் இல்லாதவர்களுக்கு உதவுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

பல்வேறு வகையான பேரிடர்களுக்கு உதவிகள் கோரி சட்டமன்றத் தொகுதி சேவை மையங்களிலிருந்தும் விண்ணப்பங்களைப் பெற்றுள்ளோம் என்று அவர் கெடிலான் கட்சியின் (கெடிலான்) கிழக்கு கடற்கரை மாநிலங்களில் வெள்ளத்திற்குப் பிந்தைய நிவாரணப் பணி நிகழ்வில் சந்தித்தபோது கூறினார்.

உணவு கூடை திட்டத்தை குறிப்பாக பண்டிகை காலங்களில் வெற்றிகரமாக நடத்துவதற்கு ஏதுவாக **10 லட்சம்** வெள்ளியை ஒதுக்குமாறு எம்.பி.ஐ. யிடம் அகமது அஸ்ரி முன்னதாக கோரிக்கை விடுத்திருந்தார்.

பேரிடர் நிவாரணம் மட்டுமின்றி, கல்வித் துறை, சமூக நலத்திட்டங்கள், பள்ளிவாசல், சூராவ் மற்றும் யாத்ரீகர்களுக்கான ஊக்கத்தொகை ஆகியவற்றுக்கும் எம்.பி.ஐ. அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்கிறது.




# அரசு ஊழியர்கள் விரைந்து செயல்பட வேண்டும் – 24 மணி நேரமும்

**ஷா ஆலம்-**
மக்கள் எதிர்நோக்கும் குறிப்பாக சமூக ஊடகங்களில் பகிரப்படும் பிரச்சனைகளுக்கு அரசு ஊழியர்கள் விரைந்து தீர்வு காண வேண்டும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறியுள்ளார்.

மாநில அரசு நிர்வாகம் அனைத்து தரப்பினராலும் தொடர்ந்து கவனிக்கப்படும் ஒரு நிர்வாகமாக உள்ளதால் சூழ்நிலைக்கு ஏற்ப முடிவுகளை எடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

நாம் எப்போதும் தயார் நிலையில் இருக்க வேண்டும். ஒரு விஷயம் இரவில் தெரிய வந்தால் காலையில் பதிலளிப்பதற்கு ஏதுவாக நாம் தயாராக வேண்டும். முடிந்தால் இரவிலேயே பதிலளிக்க வேண்டும். மக்கள் காத்திருக்க மாட்டார்கள்.

இலக்கவியலை அடிப்படையாக கொண்ட விவேக செயலி சேவைகளை அதிகளவில் வழங்கி வரும் மாநிலம் என்ற முறையில் பிரச்சனைகளுக்கு விரைந்து தீர்வு காண்பதற்கு ஏதுவாக **24 மணி நேரமும்** நாம் தயார் நிலையில் இருக்க வேண்டும் என அவர் கூறினார்.

கால மாற்றத்திற்கும் நடப்புத் தேவைக்கும் ஏற்பட அரசு ஊழியர்கள் மாற்றங்களையும் புதுமைகளையும் கொண்டு வர வேண்டும். மனித வளம் ஏழு முதல் எட்டு மணி வரையில் மட்டுமே இருந்தாலும் நாம் **24 மணி நேர** முறைக்கு தயாராக வேண்டும்.

வேலை நேரம் **காலை 8.00** மணி முதல் **மாலை 4.30** வரையிலும் **காலை 9.00 மணி** முதல் **மாலை 5.30 மணி** வரையிலும் உள்ளது. இந்த நடப்பு விதிகளை நான் உணர்ந்துள்ளேன். எனினும் நெருக்கடியான சூழல் உள்ளது. ஒவ்வொரு விஷயமும் உடனடியாக பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்று அவர் சொன்னார்.

விரிவான செய்திக்கு

# சிலாங்கூர் மாநில அளவிலான பொங்கல் விழா

**பந்திங்-**
சிலாங்கூர் மாநில அளவிலான பொங்கல் கோலாகலமாக பந்திங், சுங்கை சீடு தோட்ட தமிழ் பள்ளிக்கு அருகில் நடைபெற்றது. இந்த பொங்கல் விழா கொண்டாட்ட கலை நிகழ்ச்சியை அதிகாரப்பூர்வமாக சிலாங்கூர் மாநில மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி தொடக்கி வைத்தார்.

இந்த விழா பந்திங் சட்ட மன்ற தொகுதியில் சிலாங்கூர் மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் பாப்பா ராய்டு தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இரவு 8.45 மணி அளவில் மந்திரி புசார் அமிருடின் ஷாரி பொங்கல் விழா நடைபெறும் இடத்திற்கு வந்து சேர்ந்தார். அவருக்கு கோல கல வரவேற்பு நல்கப் பட்டது. பல வண்ண வான வேடிக்கைகள் வெடிக்கப்பட்டது. வீர முனி சங்கிலி கருப்பன் உருமி மேள குழுவினர் உருமி மேளம் வாசித்தனர். கோல லங்காட் சிலம்பக் கழக 30 மாணவர்கள் வீர சாகச கட்சிகளுடனும், பெண்கள் கோலாட்டத்துடன் மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரியை அழைத்து வந்தனர்.

கோலா லங்காட் பி.கே.ஆர் தலைவர் ஹரிதாஸ், பூச்சோங் பி.கே.ஆர் தலைவர் அன்பரசன், பாங்கி பி.கே. ஆர் தலைவர் பாலா, கோத்தா கமுனிங் சட்டமன்ற உறுப்பினர் பிரகாஷ், நகராண்மை கழக உறுப்பினர்கள் பன்னீர், கமலநாதன், சுரேஸ் மற்ற மேலும் பலர் புடை சூழ கோலகலமாக மந்திரி புசாரை அழைத்து வந்தனர்.

காலை முதல் தமிழர் பாரம்பரிய விளையாட்டு போட்டிகள் சிறப்பாக நடைபெற்றது. காலையில் சுங்கை சீடு ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலய வளாகத்தில் 52 பானைகளுடன் பொங்கல் வைக்கும் விழா தொடங்கியது.

பின்னர் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன. கபடி, உரி அடித்தல், இசை நாற்காலி, சிலம்பம், கயிறு இழுத்தல், மாருவேட போட்டி என மாலை 5.00 மணி வரை நடை பெற்றன.

பந்திங் மற்றும் சுற்று வட்டார தமிழர்கள், தமிழ்ப் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள் என அனைத்து தரப்பினரும் கலந்து சிறப்பித்தனர்.

மாலை 8.00 மணி அளவில் பொங்கல் கலை நிகழ்ச்சி நடை பெற்றன. சிலாங்கூர் மாநில போலீஸ் படையின் தலைவர் டத்தோ சசிகலா தேவி, கோல லங்காட் மாவட்ட அதிகாரி மற்றும் கோல லங்காட் நகராண்மை கழக அதிகாரிகளும் கலந்து சிறப்பித்தனர்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொது மக்களும் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.

அனைவரும் இரவு உணவு வழங்கப் பட்டன. இட்லி, தோசை, இடியாப்பம், நாசி லெமாக், மீ கோரேங் என பல்வகை உணவுகள் அனைவருக்கும் பரிமாறப்பட்டன.

இந்த பொங்கல் நிகழ்ச்சியில் வயது முதிர்ந்த 10 தாய்மார்களுக்கு பொன் ஆடை போர்த்தி சந்தன மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர். நள்ளிரவு 12.00 மணி வரை கலை நிகழ்ச்சி நடை பெற்றன. ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலை நிகழ்ச்சியை உல்லாசமாக கண்டு களித்தனர்.

# சட்டமன்றம் பிப்ரவரி 27ஆம் தேதி தொடங்கும்

**ஷா ஆலம்-**
சிலாங்கூர் மாநில சட்டமன்றக் கூட்டத் தொடர் வரும் பிப்ரவரி மாதம் **27ஆம் தேதி** தொடங்கி பத்து நாட்களுக்கு நடைபெறும்.

இக்கூட்டத் தொடரை மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா அதிகாரப்பூர்வமாக தொடக்கி வைப்பார் என்று மாநில சட்டமன்ற சபாநாயகர் லாவ் வேங் சான் கூறினார்.

மேன்மை தங்கிய சுல்தானின் உரைக்குப் பின்னர் வழக்கம் போல் அவையில் விவாதங்கள் நடைபெறும் என்று அவர் சொன்னார்.

**SELANGOR INDRU**
Sidang pengarang
**PENASIHAT**
Lembaga Editorial MSSB
**PENGARANG KUMPULAN**
Fathi Aris Omar
**KETUA PENGARANG**
A.Pakiyanathan
**PENOLONG PENGARANG**
Rajah Ramaya
**ARTIS GRAFIK**
Kathiravan Manoharan
**JURUGAMBAR**
Asri Sapfie,
Raheemie Arifiri,
Hafiz Othman & Fikri Yusof
**Aras 11, Menara Bank Rakat, No1 Jalan Indah 14/8, Seksyen 14, 4000 Shah Alam.**
*Tel: 03-5523 4856*
*Faks: 03-5523 5856*
*Email: info@mediaselangor.com*

## சிலாங்கூர் PTRS க்கு ஈர்க்க RM 10 மில்லியன் ஒதுக்கீடு

**ஷா ஆலம்-**

இந்த ஏப்ரலில் தொடங்கும் சிலாங்கூர் மாணவர்களுக்கான கல்வி பயிற்சித் திட்டத்தில் படிவம் நான்கு மற்றும் படிவம் ஐந்தின் (PTRS) 130,000 மாணவர்களை ஈர்க்க திட்டம் கொண்டுள்ளது.

மந்திரி புசார் சிலாங்கூர் (கட்டமைப்பு) அல்லது MBI இன் நிறுவன சமூகப் பொறுப்பு தலைவர் அஹ்மத் அஸ்ரி ஜைனால் நோர், இந்த இலவச கல்வி பயிற்சிக்கு RM 10 மில்லியன் ஒதுக்கீடு உள்ளதாகக் கூறினார்.

"இந்த ஆண்டுக்கான ஒதுக்கீடு 3 மில்லியன் அதிகரிக்கப்பட்டு RM 10 மில்லியனாக ஆக்கப்பட்டுள்ளது, இதனால் படிவம் 5 மாணவர்கள் மட்டுமின்றி படிவம் 4 மாணவர்களுக்கும் இது நீட்டிக்கப்பட்டுள்ளது.

"பி.டி.ஆர்.எஸ் 2024 பயிற்சிப் பட்டறை குப் பிறகு சம்பந்தப்பட்ட கல்வியாளர்கள் மற்றும் பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை தெரியவரும்," என்று அவர் சிலாங்கூர்கினியிடம் கூறினார்.

கடந்த ஆண்டு நவம்பர் 10 ஆம் தேதி 2024 ஆம் ஆண்டுக்கான சிலாங்கூர் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டபோது, மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி, MBI க்கு PTRS க்காக கூடுதலாக RM3 மில்லியன் ஒதுக்கப்படும் என்று கூறினார், இது கடந்த ஆண்டு RM7 மில்லியனுடன் ஒப்பிடும்போது RM10 மில்லியனாகும்.

PTRS மலாய், ஆங்கிலம், கணிதம், அறிவியல், வரலாறு மற்றும் சராசரி அல்லது பலவீனமான கல்வி செயல்திறன் கொண்ட குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு பிரத்தியோக வகுப்புகளை வழங்குகிறது.

அத்திட்டம், 2023 ஆம் ஆண்டிற்கான 277 பள்ளிகள் மற்றும் 1,956 ஆசிரியர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களை உள்ளடக்கிய, ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் கல்விக்கு வரும் மாணவர்களுக்கு மதிய உணவு ஆகியவை இந்த ஒதுக்கீட்டில் அடங்கும்.

## 3,835 குழந்தை பராமரிப்பு திட்ட விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன




**ஷா ஆலம்-**

கடந்த வாரம் வரை, பணிபுரியும் பெண்களுக்கான மொத்தம் 3,835 குழந்தை பராமரிப்பு திட்ட விண்ணப்பங்கள் மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

மீதமுள்ள 1,165 மாமாகெர்ஜா விண்ணப்பங்கள் ஆவண சரி பார்ப்புக்காகப் பரிசீலிக்கப்பட்டு வருவதாக மகளிர் மேம்பாட்டு ஆட்சி குழு உறுப்பினர் அன்பால் சாரி தெரிவித்தார்.

"இந்த ஊக்கத்தொகை ஒதுக்கீடு 5,000 பெறுநர்களுக்கு வழங்குகிறோம். இதுவரை 3,835 விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள விண்ணப்பங்கள் தற்போது ஆவணச் சரிபார்ப்பில் உள்ளன.

"தற்போது, மாநில அரசு மாமாகெர்ஜா உதவியைப் பெறுபவர்களின் ஒதுக்கீட்டை அதிகரிக்கத் திட்டமிடவில்லை," என்று அவரைத் தொடர்பு கொண்டபோது கூறினார்.

மாநிலம் முழுவதும் 5,000 பெண்கள் பயன்பெறும் வகையில் பணிபுரியும் பெண்களின் செலவைக் குறைக்க சிலாங்கூர் அரசாங்கம் குழந்தைப் பராமரிப்பு உதவி திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

நவம்பர் 1 ஆம் தேதி தொடங்கிய மாமா கெர்ஜா திட்டம், கடந்த ஆகஸ்ட் மாதம் சிலாங்கூர் மாநிலத் தேர்தலில் மக்களுக்கு வழங்கிய ஒற்றுமை அரசாங்கத்தின் வாக்குறுதிகளில் ஒன்றாகும்.

முதல் சிலாங்கூர் திட்டத்திற்கு (RS-1) இணங்க பெண்கள் பணிபுரிவதை ஆதரிப்பதே அதன் செயலாக்கமாகும்.

RM5 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்ட இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்க குடும்ப வருமானம் RM8,000க்கு மிகாமல் 12 வயதுக்குட்பட்ட மூன்று குழந்தைகளைக் கொண்ட பணிபுரியும் பெண்கள் தகுதியுடையவர்கள்.

**பிற தகுதிகள் பின்வருமாறு:**

1. வேலை செய்யும் மற்றும் சுயதொழில் செய்யும் பெண்கள்
2. சிலாங்கூர் குடிமக்கள் (சிலாங்கூரில் பிறந்தவர்கள் அல்லது 10 ஆண்டுகளுக்கும் மேலாகச் சிலாங்கூரில் வசிப்பவர்கள்)
3. சிலாங்கூர் வாக்காளர்
4. RM8,000 மற்றும் அதற்கும் குறைவான குடும்ப வருமானம்
5. உள்நாட்டு வருவாய் வாரியம் (IRB) கணக்கு அல்லது ஊழியர் சேமநிதி வாரிய (EPF) பங்களிப்பு உள்ள தனிநபர்கள்
6. அசோ பிந்தார், பிங்காஸ் மற்றும் துனாஸ் ஆகியவற்றைப் பெறாதவர்

## நில வரி மற்றும் வீட்டு வரி பில்கள் தபால் மூலம் அனுப்பப்படாது

**ஷா ஆலம்-**

இந்த ஆண்டு முதல், சிலாங்கூரில் உள்ள சொத்து உரிமையாளர்களுக்கு நில வரி மற்றும் வீட்டு வரி பில்கள் தபால் மூலம் அனுப்பப்படாது என்று மாநில நில நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

மேலும், உரிமையாளர்கள் இணையம் மூலம் பில் பெற சமூக ஊடகங்களில் இணைக்கப்பட்டுள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்ய வேண்டும் என்று சிலாங்கூர் நிலம் மற்றும் சுரங்க அலுவலகம் (PTG) தெரிவித்துள்ளது.

"பயனர்கள் தங்கள் கணக்கு எண், ஐடி அல்லது உரிமை விவரங்களை உள்ளிட்டு பதிவு செய்யலாம். ஏதேனும் கேள்விகள் இருந்தால், hasilptg@selangor.gov.my ஐ தொடர்பு கொள்ளவும்" என்று முகநூலில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், ehasil.selangor.gov.my நாடுவதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் மே 31க்கு முன் தொடர்புடைய வரிகளை செலுத்துமாறு பயனர்களுக்கு நிறுவனம் நினைவூட்டியது.

தேசிய நிலக் குறியீடு 1965 இன் பிரிவு 100 மற்றும் நில உரிமைச் சட்டம் 1985 இன் பிரிவு 23 ஆகியவற்றின் கீழ் வரி பாக்கி உள்ள நிலம் அல்லது மனைகள் பறிமுதல் செய்யப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

## மின்சார வாகனத் தொழில் துறை மேம்பாடு வேலை வாய்ப்புகளை வழங்கும்




**ஷா ஆலம்-**

நாட்டின் மின்சார வாகன (EV) தொழில் வளர்ச்சிக்கு ஆதரவாக வலதுகர (RHD) ஆராய்ச்சி மையத்தை உருவாக்க மாநில அரசு திட்டமிட்டுள்ளது.

இந்தத் திட்டம் சிலாங்கூரை EV சுற்றுச்சூழல் அமைப்பில் முன்னோடியாக மாற்றும். அதே நேரத்தில் உள்ளூர் மக்களுக்கு சம்பந்தப்பட்ட தொழில்துறையை ஆராய்வதற்கான வாய்ப்பையும் வழங்குகிறது என முதலீட்டு ஆட்சிக்குழு உறுப்பினர் இங் ஸீ ஹான் கூறினார்.

இத்திட்டம் ஆட்டோமேஷன் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் துறை மூலம் திறமையான மற்றும் அதிக வருமானம் கொண்ட வேலை வாய்ப்புகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகவும் உள்ளது என்றார்.

EV தொழில், உலகம் முழுவதும் வேகமாக வளர்ந்து வருவதால், இந்த திட்டம் பலனளிக்கும் மற்றும் பல தரப்பினருக்குப் பெரும் பலன்களைத் தரும் என்றும் ஸீ ஹான் நம்பிக்கை தெரிவித்தார்.

முதல் சிலாங்கூர் திட்டம் (RS-1) மூலம் 10,000 சார்ஜிங் நிலையங்களை உருவாக்கும் இலக்குடன் நடமாடும் ஆய்வகத்தின் எதிர்கால மேம்பாடு உட்பட EV தொழிற்துறையை சிலாங்கூர் தீவிரமாக வலுப்படுத்துகிறது.

கடந்த ஆண்டு நவம்பரில், பல்வேறு துறைகளில் பசுமைத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்காக EV தொழில் துறையின் வளர்ச்சியை எளிதாக்குவதில் உறுதியாக இருப்பதாக பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.




# 56 லட்சம் சுற்றுப்பயணிகளை ஈர்க்க சிலாங்கூர் இலக்கு

**சபாக் பெர்ணம்-**

இவ்வாண்டில் **56 லட்சம்** உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுப்பயணிகளை ஈர்க்க சிலாங்கூர் அரசு திட்டமிட்டுள்ளது.

நாட்டில் அதிக வளர்ச்சி கண்ட மாநிலமான சிலாங்கூருக்கு கடந்தாண்டு வருகை புரிந்த **48 லட்சம்** சுற்றுப்பயணிகளைக் காட்டிலும் இவ்வாண்டில் கூடுதலாக பத்து லட்சம் பேரை கவர திட்டமிடப்பட்டுள்ளதாக சுற்றுலாத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ இங் சுயி லிம் கூறினார்.

மாநில அரசு மேற்கொண்டு வரும் பல்வேறு ஊக்குவிப்புத் திட்டங்கள் வாயிலாக இந்த சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை சாத்தியமாகும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம் எனக் கூறிய அவர், வரும் '**2025** சிலாங்கூருக்கு வருகை தாருங்கள் ஆண்டு' பிரசார இயக்கத்திற்கான முன்னேற்பாடாகவும் இது விளங்குகிறது என்றார்.

தாய்லாந்து சுற்றுலா முகவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட தென் சிலாங்கூரை பிரபலப்படுத்தும் நோக்கிலான மூன்று நாள் இரண்டு இரவு பிரசார இயக்கத்தின் போது டத்தோ இங் இவ்வாறு தெரிவித்தார்.

தாய்லாந்து நாட்டின் ஹட்யாய், சொங்க்லா மற்றும் பெத்தோங்கை சேர்ந்த **40** சுற்றுலா முகவர்களை வரவழைத்து அவர்கள் மத்தியில் கோல சிலாங்கூர், சபாக் பெர்ணம் போன்ற மாநிலத்தின் தென் பிராந்தியத்திலுள்ள சுற்றுலா மையங்களை பிரபலப்படுத்தும் நோக்கில் இந்த இயக்கம் நடத்தப்படுகிறது.

இந்த இயக்கத்தின் போது புக்கிட் மலாவத்தி, பந்தாய் ரெடாங், ஸ்கை மிரர், மின்மினிப் பூச்சி சரணாலயம் உள்ளிட்ட இடங்களுக்கு தாய்லாந்து சுற்றுலா முகவர்கள் வருகை புரிவர். ஆயர் சிலாங்கூர் நிறுவனத்தின் வாயிலாகச் சேவைத் தரம் மேம்படுத்தப்படுவது மற்றும் அந்நிறுவனத்தின் செயலி தரம் உயர்த்தப்படுவது போன்றவற்றை மாநில அரச தொடர்ந்து கண்காணித்து வரும் என அவர் சொன்னார்.

# 36,326 தவாஸ் உறுப்பினர்களுக்குப் பள்ளி உபகரண உதவி

**ஷா ஆலம்-**

சிலாங்கூர் குழந்தைகள் நிதியத்தின் **(தவாஸ்)** மொத்தம் **36,326** உறுப்பினர்கள் இந்த ஆண்டு முதல் வகுப்பில் சேர உள்ளனர். அவர்கள் பள்ளி நுழைவு உதவித் திட்டத்தின் **(பிபிஎம்எஸ்)** கீழ் பள்ளி உபகரண உதவிகளைப் பெறத் தகுதி பெற்றுள்ளனர்.

பள்ளி உதவி பொருட்களில் பள்ளி பைகள், எழுதுபொருட்கள், உணவுப் பாத்திரங்கள் மற்றும் உண்டில்கள் ஆகியவை அடங்கும் என யாயாசான் வாரிசான் அனாக் சிலாங்கூர் **(யாவாஸ்)** நிறுவனத்தின் உதவி நிறுவன தொடர்பு மேலாளர் கூறினார்.

யாவாஸ் உதவிக்கான தகுதி மற்றும் அதைப் பெறுவதற்கான முறையைப் பார்க்க பெற்றோர்கள் தவாஸ் விண்ணப்பத்தைப் நாடலாம் என ஷாரிசான் முகமட் ஷாரிவ் கூறினார்.

"யாவாஸ் விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து, பதிந்து கொள்ளுங்கள். மாநில சட்டமன்றத்தின் சமூக சேவை மையத்தில் உதவியைப் பெறலாம்.

"இந்த உதவியானது மாணவர்களுக்குப் பள்ளி உபகரணங்களை வழங்குவதில் பெற்றோரின் சுமையைக் குறைக்கும் என்று நம்புகிறோம்," என்று அவரைத் தொடர்பு கொண்டபோது கூறினார்.

**2008** இல் தொடங்கப்பட்ட தவாஸ் திட்டம் சிலாங்கூரில் பிறந்த குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய தொடங்கப்பட்டது. அக்குழந்தைகள் மூன்று வயதை அடைவதற்கு முன்பே பதிவு செய்யப்பட வேண்டும். இத்திட்டத்தின் மூலம் உறுப்பினர்கள் 18 வயதை அடையும்போது **RM1,500** பெறுவார்கள்.

# உணவு சேமிப்பு கிடங்கு

## கோலா சிலாங்கூரில் திறக்கப்படும்

**கிள்ளான்-**

வானிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் வகையில் உணவு சேமிப்பு கிடங்கு கோலா சிலாங்கூரில் திறக்கப்படும்.

இந்த கிடங்கு மொத்தம் **40 மில்லியன்** ரிங்கிட் ஒதுக்கீட்டில் ஐந்து ஏக்கர் நிலத்தில் திறக்கப்படும் என விவசாய ஆட்சிக்குழு உறுப்பினர் இஷாம் அசிம் தெரிவித்தார்.

கோலா சிலாங்கூரில் உணவு வழங்கல் சேமிப்பு இடத்தை மாநில அரசு கண்டறிந்துள்ளதாக வும், அதன் மேலாண்மை முறையை உருவாக்கும் பணியில் தற்போது ஈடுபட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

"விதை மற்றும் இனப்பெருக்கம் உயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது மற்றும் விவசாயத்தில் வெற்றியை உறுதி செய்கிறது. கால்நடைகளின் தரம் மற்றும் கோழி குஞ்சுகள், ஆடுகள், மீன் மற்றும் இறால்களின் இனப்பெருக்கம் ஆகியவற்றில் மாநில அரசு கவனம் செலுத்துகிறது," என்று அவர் கூறினார்.

சுங்கை சிரேஹ் ஜெத்தியில் நேற்று நடைபெற்ற அக்ரோபிரைனர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ஐந்து மாவட்டங்களில் உள்ள மீனவர்களுக்குப் மீன்பிடி உபகரணங்கள் மற்றும் உணவுக்கூடைகள் வழங்கும் விழாவில் அவர் இவ்வாறு கூறினார்.

கடந்த ஆண்டு, சிலாங்கூர் பட்ஜெட் **2024** ஐ சமர்ப்பித்தபோது, பருவநிலை மாற்றம் அல்லது புவிசார் அரசியலால் ஏற்படும் எந்தச் சூழ்நிலையிலும் உணவு இருப்புகளின் தயார் நிலையை வலுப்படுத்த **40 மில்லியன்** ரிங்கிட் ஒதுக்கப்பட்டதாக டத்தோ மந்திரி புசார் அறிவித்தார்.

40 மில்லியன் என்பது மாநில அரசு மற்றும் சிலாங்கூர் வேளாண்மை வளர்ச்சிக் கழகம் **(PKPS)** ஆகியவற்றிலிருந்து தலா **20 மில்லியன்** ரிங்கிட் ஒதுக்குவதாக அவர் கூறினார்.



# பழைய குழாய்களை மாற்றும் பணியை இரட்டிப்பாக்க முடியும்

**ஷா ஆலம்-**

குடிநீர் கட்டண உயர்வின் மூலம் பழைய குழாய்களை மாற்றும் பணியை இரட்டிப்பாக்கி குழாய் உடைவது மற்றும் நீர் கசிவு போன்ற பிரச்சனைகளைப் பெங்குருசான் ஆயர் சிலாங்கூர் நிறுவனம் தீர்ப்பதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்த முடியும்.

தற்போது ஆண்டுக்கு **150** கிலோ மீட்டராக இருக்கும் பழைய குழாய்களை மாற்றும் பணி, புதிய குடிநீர் கட்டண சீரமைப்பின் வாயிலாக **300** கிலோ மீட்டர் வரை அதிகரிக்க இயலும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

பதினெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு முதன் முறையாகக் குடிநீர் கட்டணம் உயர்த்தப்படுவதாகக் கூறிய அவர், புதிய நீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதன் மூலம் எதிர்வரும் **2030** ஆம் ஆண்டுவாக்கில் உபரி குடிநீர்க் கையிருப்பை **20** விழுக்காடாக உயர்த்த முடியும் என அவர் சொன்னார்.

புதிய குழாய்களை பொருத்துவது உள்ளிட்ட பராமரிப்பு மற்றும் தரம் உயர்த்தும் பணிகளை இரடிப்பாக்குவதற்கும் நீர் அழுத்த பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் இந்த கட்டண உயர்வு பெரிதும் துணை புரியும் என அவர் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டார்.

குடிநீர்க் கட்டண உயர்வு தொடர்பான அறிவிப்பை ஸ்பான் எனப்படும் தேசிய நீர் சேவை ஆணையம் நேற்று முன்தினம் வெளியிட்டது. தீபகற்ப மலேசியா மற்றும் லபுவானில் எதிர்வரும் பிப்ரவரி முதல் தேதி தொடங்கி அமல்படுத்தப்படவிருக்கும் இந்த கட்டண உயர்வு ஒரு கன மீட்டருக்கு **22** காசை உட்படுத்தி இருக்கும் என அது தெரிவித்தது.

சுகாதார அமைச்சின் தர நிர்ணய திற்கேற்ப நீரின் தரத்தை உயர்த்தி **99** விழுக்காடாக நிலை நிறுத்த இயலும் என அமிருடின் குறிப்பிட்டார்.

ஆயர் சிலாங்கூர் நிறுவனத்தின் வாயிலாகச் சேவைத் தரம் மேம்படுத்தப்படுவது மற்றும் அந்நிறுவனத்தின் செயலி தரம் உயர்த்தப்படுவது போன்றவற்றை மாநில அரச தொடர்ந்து கண்காணித்து வரும் என அவர் சொன்னார்.

# இரண்டாவது ஆட்சி மன்றத்தில் இந்தியர்கள்

சிலாங்கூரில் மாநில அரசுக்கு அடுத்தபடியாக அதிக சக்தி வாய்ந்த நிர்வாக சபைகளாக நகராண்மைக் கழகங்கள் மற்றும் மாநகர் மன்றங்கள் விளங்குகின்றன. இங்குள்ள சில ஊராட்சி மன்றங்களின் வரவு\செலவு ஒரு சில மாநில அரசுகளின் ஆண்டு பட்ஜெட்டை காட்டிலும் பெரியது.

அந்த சக்திவாய்ந்த மன்றங்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை புதிய நகராட்சி உறுப்பினர்களை அரசாங்கம் நியமனம் செய்யும். அதன்படி அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளுக்கு பல புது முகங்களை நகராட்சி உறுப்பினர்களாக சிலாங்கூர் அரசு நியமனம் செய்துள்ளது. அதன்படி. ஷா ஆலம் மாநகர் மன்றத்தில் இரு புதுமுகங்கள் உட்பட நான்கு இந்தியர்கள் நியமனம் பெற்றுள்ளனர்.

## ஷா ஆலம்

இம்முறை ஷா ஆலம் மாநகர் மன்றத்திற்கு, நகராட்சி உறுப்பினர்களுடன்புதியதலைவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.11வதுடத்தோ பண்டாராக நியமிக்கப்பட்டுள்ள செரேமி தர்மான் அதிகாரப்பூர்வமாக பதவி உறுதிமொழி எடுத்துக் கொண்டார். இந்த பதவியேற்பு சடங்கின் ஒரு பகுதியாக மாநகர் மன்றத்தின் 22 புதிய உறுப்பினர்களும் 2024/2025 ஆம் ஆண்டு தவணைக்கு பதவி உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இந்த நியமனத்தில் இந்தியப் பிரதிநிதிகளாக ராமு நடராஜன், முருகையா முனுசாமி, யோகேஸ்வரி சாமிநாதன், நத்தின்ட்ரன் ராஜ் பாஸ்கரன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். அவர்களில் ராமு நடராஜன், எம். முருகையா தவிர மற்ற இருவரும் புது முகங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த பதவியேற்பு சடங்கில் உரையாற்றிய டத்தோ பண்டார், மாநகர் மன்றம் சிறப்பான அடைவு நிலையைப் பதிவு செய்வதற்கும் சேவைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் மாநகர் மன்ற உறுப்பினர்களின் பரந்த அனுபவமும் நிபுணத்துவமும் பெரிதும் உதவும் என நம்பிக்கைத் தெரிவித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காலியாக உள்ள இரு கவுன்சிலர் பதவி மாநில அரசுடன் கலந்தாலோசிக்கப் பட்டப் பின்னர் பூர்த்தி செய்யப்படும் என்றார். அவ்விரு பதவிகளுக்கும் பொருத்தமான வேட்பாளர்களை மாநில அரசு தற்போது பரிசீலித்து வருகிறது என அவர் குறிப்பிட்டார்.

பெட்டாலிங் மாநகர் மன்றத்தின் 2024/ 2025 ஆம் ஆண்டு தவணைக்கான கவுன்சிலர்களாக நான்கு இந்தியர்கள் உட்பட 21 பேர் நியமனம் பெற்றுள்ளனர்.

இங்குள்ள எம்.பி.பி.ஜே. தலைமையகத்தில் பெட்டாலிங் ஜெயா துணை டத்தோ பண்டார் அட்னான் ஹாஜி ஹசான் முன்னிலையில் புதிதாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் அனைவரும் பதவி உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இந்த நியமனத்தில் இந்திய பிரதிநிதிகளாக சுகுமாறன் த/பெ அண்ணாமலை, சுரேஷ் த/பெ கெங்கையா, குஷாலினி த/பெ மகேந்திரன் மற்றும் நலினா நாயர் த/பெ ராமகிருஷ்ணன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.




பெட்டாலிங் ஜெயா வட்டார மக்களுக்கு மன நிறைவளிக்கும் வகையில் சேவை வழங்குவதற்கு ஏதுவாக ஆக்ககரமான பங்களிப்பை மாநகர் மன்றத்திற்கு வழங்கும் நோக்கில் இந்த உறுப்பினர்கள் நியமனம் அமைவதாக துணை டத்தோ பண்டார் டத்தோ அட்னான் கூறினார்.

வரும் 2030ஆம் ஆண்டில் பெட்டாலிங் ஜெயாவை விவேக மற்றும் வசிப்பதற்கு உகந்த நகராக உருவாக்கும் இலக்கை அடைவதில் இந்த தவணைக்கான பழைய மற்றும் புதிய உறுப்பினர்களின் நியமனம் பெரிதும் துணை புரியும் என தான் நம்புவதாக அவர் சொன்னார்.

மாநில அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதிலும் மாநில அரசின் அபிலாஷைகள் மற்றும் தொலைநோக்கு இலக்கு ஆகியவற்றை அடைவதற்கு ஏதுவாக சேவைத் திறனை அதிகரிப்பதிலும் மாநகர்மன்ற உறுப்பினர்கள் முக்கிய பங்கினை ஆற்றுவார்கள் என நான் பெரிதும் எதிர்பார்க்கிறேன் என்று அவர் சொன்னார்.

அம்பாங் ஜெயா நகராண்மைக் கழகத்தின் புதிய உறுப்பினர்களாக 23 பேர் பதவி உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். 2024-2025 ஆம் ஆண்டு தவணைக்கு நியமிக்கப்பட்ட புதிய நகராண்மைக் கழக உறுப்பினர்களில் மூன்று இந்தியர்களும் அடங்குவர்.

நடேசன் த/பெ வரதன், விக்னேஸ்வரன் த/பெ ஜெயராம், ஆர்.மோகன்ராஜ் த/பெ ரெங்கநாதன் ஆகியோரே அந்த மூன்று உறுப்பினர்களாவர்.




இவர்கள் அனைவரும் அங்குள்ள அம்பாங் ஜெயா நகராண்மைக் கழக தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் நகராண்மைக் கழகத் தலைவர் டாக்டர் அனி அகமது முன்னிலையில் பதவி உறுதி மொழி எடுத்துக் கொண்டனர்.

இந்த புதிய தவணைக்கு நியமிக்கப்பட்ட நகராண்மைக் கழக உறுப்பினர்களில் எழுவர் புதுமுகங்கள் என்பதோடு ஆறு பேர் அல்லது 25 விழுக்காட்டினர் பெண்களாவர் என்று டாக்டர் அனி அகமது கூறினார்.

எனது அலுவலகத்தின் கதவுகள் எப்போதும் திறந்திருக்கும். நீங்கள் எப்போது வேண்டுமானாலும் என்னை அணுகி கொள்கை, மேலாண்மை, மக்கள் பிரச்சனை உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து பேசலாம் என்று அவர் சொன்னார்.

காஜாங் நகராண்மைக் கழகத்தின் 2024/2025 தவணைக்கான புதிய உறுப்பினர்கள் நியமனம் இன்று இங்குள்ள எம்.பி.கே.ஜே. தலைமையகத்தில் நடைபெற்ற இந்த பதவியேற்பு சடங்கில் 5 இந்தியர்கள் உள்பட 23 பேர் இன்று பதவியேற்றனர்.

புதிதாக நியமிக்கப்பட்ட அனைத்து 23 உறுப்பினர்களும் காஜாங் நகராண்மைக் கழக தலைவர் நஸ்லி முகமட் தாயிப் முன்னலையில் பதவி உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.




பதவியேற்றவர்களில் சந்திரன் ராமசாமி (பி.கே.ஆர் உலு லங்காட்), ராமசந்திரன் அர்ஜுனன், பி.கே.ஆர். பாங்கி தொகுதி தலைவர் பாலமுரளி கோவிந்தராஜு, ஜ.செ.க. பிரதிநிதியான தியாகராஜா ராஜகோபால், சங்கீதா சந்திரமோகன் ஆகியோர் அடங்குவர்.

இவர்கள் கடந்த தவணையின் போதும் நகராண்மைக் கழக உறுப்பினர்களாகப் பதவி வகித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பதவியேற்பு சடங்குக்கு பிறகு செய்தியாளர் சந்திப்பில் பேசிய துவான் நஸ்லி, கடந்த தவணையில் இருந்து பணியாற்றி வரும் நகராண்மைக் கழக உறுப்பினர்களின் ஒத்துழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு மிகவும் பாராட்டும் வகையில் உள்ளது.

பழைய நகராண்மைக் கழக உறுப்பினர்களின் அனுபவங்களுடன் புதிய நகராண்மைக் கழக உறுப்பினர்கள் இணையும் போது இவ்வாண்டு மற்றும் அடுத்தாண்டில் எம்.பி.கே.ஜே. மிகவும் சிறந்த அடைவுநிலையைப் பதிவு செய்யும் என்று நான் எதிர்பார்க்கிறேன் துவான் நஸ்லி தெரிவித்தார்.

# கெசுமா மடாணி திட்டத்தின் வழி சிறப்பு சேவை



**பத்துமலை-**
தைப்பூச திருவிழாவை முன்னிட்டு பத்துமலை முருகன் திருத்தலத்திக்கு **10 லட்சம்** பக்தர்கள் திரள்வார்கள். இவர்களில் குறைந்தது **5 லட்சம்** பேருக்கு மனித வளத்துறை அமைச்சின் கீழ் கெசுமா மடாணி என்ற திட்டத்தின் கீழ் சிறப்பு சேவை வழங்கப் பட வேண்டும் என்று மனித வளத்துறை அமைச்சர் ஸ்டிவன் சிம் சீ கியோங் தெரிவித்தார்.

எதிர்வரும் தைப்பூச திருவிழாவை முன்னிட்டு மனித வளத்துறை அமைச்சர் ஸ்டிவன் சிம் பத்துமலை முருகன் கோவிலுக்கு இன்று சிறப்பு வருகை மேற்கொண்டார் . கடந்த வாரத்தில் போக்கு வரத்து துறை அமைச்சர் அந்தோணி லொக் வருகை தந்தார் என்பதும் குறிப்பிட தக்கது.

காலை சரியாக 10.00 **மணிக்கு** இங்கு வந்தடைந்த அமைச்சர் உடனே பத்துமலை கோவில் அடிவாரத்தில் இருக்கும் விநாயக பெருமான் கோவிலுக்கு அழைத்து செல்லப் பட்டு சிறப்பு அர்ச்சனை செய்யப் பட்டு பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து சிறப்பிக்கப் பட்டார்.

அதனை தொடர்ந்து பத்திரிகையாளர்களை சந்தித்தார். மனித வளத்துறை கீழ் கெசுமா மடாணி என்ற **200** பேர் கொண்ட தொண்டூழிய சேவையாளர்கள் தைப்பூசத்தன்று பக்தர்களுக்கு சிறப்பு சேவை வழங்குவர்.

பத்துமலைக்கு வரும் உடற்பேறு குறைந்தவர்கள், சிறார்கள், கர்ப்பணி பெண்கள் என அனைவருக்கும் ஓய்வு எடுக்கும் தளத்தில் மனித வளத்துறை அமைச்சின் கீழ் வழங்கப்படும் பயிற்சிகளுக்கான பதிவுகள் போன்ற சிறப்பு சேவை வழங்கப்படும்.

இதற்காக பத்துமலை நுழைவாசாலுக்கு அருகில் அமைக்கப் பட்ட மா பெரும் கூடாரத்தில் ஒரே நேரத்தில் குறைந்தது **500 பேர்** பயனடையலாம். மனித வளத்துறை அமைச்சு முதன்முறையாக இந்த சிறப்பு சேவையை பத்துமலை முருகன் கோவிலில் செய்கிறது. பத்துமலை கோவிலுக்கு வரும் பொது மக்களை தேடி சென்று அரசு அதன் சேவைகளை வழங்கவுள்ளது.

இந்த சிறப்பு சேவையின் வழி மலேசியர் என்ற உணர்வை மேலோங்க செய்ய முடியும். தொண்டு சேவையில் ஈடு படும் தொண்டர்களுக்கு இது ஒரு சிறப்பு பயிற்சியாக அமையும்.

இத்திட்டத்தில் மித்ராவும் இணைந்து பயிற்சிகளுக்கான பதிவுகளை செய்கிறது. இதன் வழி இந்திய சமுதாயத்திக்கு சிறப்பான சேவையை செய்ய முடியும் என்று அமைச்சர் ஸ்டிவன் சிம் தெரிவித்தார்.

# ஆலய மேம்பாட்டுப் பணிகளுக்கு ஆதரவு வழங்கப்படும்



**பத்துமலை-**
பத்துமலை திருத்தலத்தில் மேற்கொள்ளப்படும் மேம்பாட்டு திட்டங்களுக்கு ஆதரவு வழங்கப்படும் என்று டிஜிட்டல் துறை அமைச்சர் கோபிந்த் சிங் டியோ தெரிவித்தார்.

நாடு தழுவிய நிலையில் தைப்பூச விழா விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது.

குறிப்பாக லட்சக்கணக்கான மக்கள் பத்துமலையில் கூடி தைப்பூச விழாவை கொண்டாடி வருகின்றனர்.

இவ்வேளையில் அனைத்து இந்து மக்களுக்கும் தைப்பூச விழா வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் நாட்டில் வாழும் இந்திய சமுதாயத்தின் மேம்பாட்டிற்காக பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் தலைமையிலான அரசு பல திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

இத்திட்டங்கள் அனைத்தும் நிச்சயம் இந்திய சமுதாயத்திற்கு பெரும் பயனாக இருக்கும்.

மேலும் பத்துமலையில் மின் படிக்கட்டு , கலாச்சார மண்டபம் கட்டுவது தொடர்பாக பல கோரிக்கைகளை தேவஸ்தான தலைவர் டான்ஸ்ரீ நடராஜா இன்று முன்வைத்தார்.

இந்த கோரிக்கைகளை பிரதமர் பார்வைக்கு கொண்டு செல்வேன். குறிப்பாக இந்த விவகாரம் குறித்து ஏற்கெனவே பிரதமரிடம் கூறியுள்ளேன். இத்திட்டங்களுக்கு அரசு முழு ஆதரவு தரும் என பிரதமர் கூறினார்.

ஆகவே தேவஸ்தானத்தின் கோரிக்கைகள் நிச்சயம் நிறைவேற்றப்படும் என்று அமைச்சர் கோபிந்த் சிங் கூறினார்.

மலைக்கோயிலில் உள்ள முருகப் பெருமானைத் தரிசிப்பதற்கு 272 படிக்கட்டுகளில் ஏறுவதற்கு பதிலாக அங்கு மின்படிக்கட்டுகளை தேவஸ்தானம் அமைக்கும் என்று அதன் தலைவர் டான்ஸ்ரீ ஆர்.நடராஜா முன்னதாகக் கூறியிருந்தார்.

இந்த மின்படிக்கட்டுத் திட்டம் தைப்பூசம் முடிந்தவுடன் தொடங்கப்படும் எனக் கூறிய அவர், சுமார் மூன்றரை கோடி வெள்ளி செலவில் பல்நோக்கு மண்டபம் அமைப்பது மற்றொரு திட்டமாகும் என்றார்.

# நாட்டுக்கு 2024ஆம் ஆண்டு

## *தைப்பூசம் கொடுத்த தெளிவு*

**பத்துமலை-**
இவ்வாண்டு தைப்பூச திருவிழா நாடெங்கும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. மடாணி அரசு ஆட்சியில் கெடா முதல் ஜொகூர் வரை எல்லா மதமும், எல்லா இனமும் ஒற்றுமையாக வாழ முடியும் என்பதை மெய்பித்துள்ளது இந்த ஆண்டு தைப்பூச கொண்டாட்டம்.

மலேசிய தைப்பூசம் அரசின் முழு ஒத்துழைப்போடு இவ்வாண்டுப் போல் முன்பு என்றும் கொண்டாடப்படவில்லை. வெற்றிகரமாக ஒற்றுமையாக, மடாணி அரசின் கொண்டாட்டம் தனித்துவமாக அமைந்திருந்தது.

பத்துமலை முருகன் திருக்கோவிலுக்கு போக்குவரத்து அமைச்சர் அந்தோணி லோக், மனித வளத்துறை அமைச்சர் ஸ்டிபன் சிம், மின்னியல் துறை அமைச்சர் கோபிந் சிங் டியோ, சிலாங்கூர் மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி போன்று முக்கிய பிரமுகர்கள் ஒன்று சேர இங்கு வந்து பத்துமலை தைப்பூசத்தை ஒரு அரசு விழா மாதிரி ஆக்கிவிட்டனர்.

இந் நாட்டில் எல்லா மக்களின் ஆதரவையும் பெற்று **22 ஆண்டுகள்** ஆட்சிக் கட்டிலில் சுகம் கண்ட பெரிச்சாலி, இன்று இந்தியர்களின் தேச விசுவாசம் மீது கேள்வி எழுப்பியுள்ளது, மறுபுறம் ஒரு சாரார் நம் சமய விழாக்களை சிறுமைப்படுத்தும் ரீதியிலும், நமது பெருநாளுக்கு வாழ்த்து தெரிவிப்பது கூட அவர்களின் சமயத்திற்கு இழிவு என பிரச்சாரம் செய்து வரும் வேளையில், சிலாங்கூர் அரச தம்பதிகள் மட்டுமின்றி நாட்டின் பேரரசர் முதல் பிரதமர், துணை பிரதமர் மற்றும் பல அமைச்சர்களும் தைப்பூசத்திற்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டது இந்தியர்களுக்கு பெரும் மகிழ்ச்சிக்கு உரிய விஷயம்.

மேலும் தைப்பூச பண்டிகைக்கு பத்துமலை மற்றும் பினாங்கு தண்ணீர் மலை கோவிலுக்கு சென்று திரும்ப, பக்தர்களுக்கு இரண்டு நாட்கள் இலவச ரயில், பெரி மற்றும் பஸ் சேவையை போக்குவரத்து அமைச்சர் வழங்கியதை நமது மக்கள் கொண்டாடத் தவறவில்லை. இவை அனைத்தும் நமது பண்டிகைக்கு கிடைத்த தேசிய அடையாளமாக மக்கள் கருதுகிறார்கள்.

ஒரு இந்தியர் போக்குவரத்து அமைச்சராக இருந்த காலத்தில் கூட நமக்கு வழங்கப்படாத அங்கீகாரத்தை மடாணி அமைச்சர்கள் வழங்கியது, மலாய்க்காரர் அல்லாத மக்கள் மீது மடாணி அரசு கொண்டுள்ள நன்மதிப்பின் அடையாளமாக இந்தியர்கள் பார்க்க தொடங்கி விட்டனர். எதுவானாலும் இது ஒரு கௌரவமே என்பதை நாம் ஒப்புக் கொண்டே ஆக வேண்டும்.

அது மட்டுமன்றி பத்துமலையில் வழங்கப்பட்ட திவேட் கல்வி, ஏழ்மை ஒழிப்பு உதவித்திட்டங்கள் பாடு, சாரா பதிவு திட்டங்கள் போன்ற பல மக்கள் நலத் திட்டங்களை இந்திய மக்கள் அதிகம் ஒன்று கூடும் பத்துமலையில் நடத்தியது, மக்களை தேடி மடாணி அரசாங்க திட்டங்களை முன்னெடுத்து வருவதற்கான இன்னொரு ஆதாரம். இவை அனைத்தும், மலேசிய இந்தியர்கள் மீது அரசாங்கம் கொண்டுள்ள நல்ல அபிமானத்தை, கரிசனத்தை காட்டுவதாக அமைந்துள்ளது

தமிழ் பேசும் அமைச்சர் இல்லை என்ற மனக்குறையை போக்கும் வண்ணம் மற்றவர்கள் அந்த இடத்தை சிறப்பாக நிரப்பி உள்ளனர் என்றால் மிகையாகாது.பெரும்பான்மையான தமிழர்களின் மனக்குறையை மடாணி அரசு நல்ல முறையில் தீர்த்து வைத்துள்ளது.

இந்தியர்களின் அரசியல் உரிமையை இந்தியர்கள் பேச வேண்டும் , தீர்வு காண வேண்டும் என்று கடந்த 66 ஆண்டுகளாக இருந்து வந்த அரசியல் பாரம்பரியத்தை தகர்த்தெறிந்த தைப்பூசக் கொண்டாட்டம் இது என்றால் அது மிகையாகாது.

ஆம், மடாணி அரசு நாட்டில் உள்ள எல்லா மக்களுக்குமான அரசு என்பதை இவ்வாண்டு தைப்பூசக் கொண்டாட்டம் தெளிவு படுத்தியுள்ளதை தமிழ் மக்கள் கண்டனர்.

மலேசிய இந்தியர்கள் புதிய அரசியல் பரி நாம வளர்ச்சியை நோக்கி ஒற்றுமையாக மலேசியர்களாக செயல் படுவோம். நாட்டின் அரசியல் நிலைத்தன்மைக்கு தொடர்ந்து பாடுபடுவோம். பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் தலைமையிலான மடாணி ஆட்சியை தற்காப்போம். நாட்டு வெற்றியில் பங்கு கொள்வோம்




ஒற்றுமை, சகிப்புத் தன்மையை வளர்போம்- தைப்பூச வாழ்த்துச் செய்தியில் சுல்தான் தம்பதியர் அறைகூவல்



மகிழ்ச்சி, பன்முகத்தன்மையுடன் தைப்பூசத்தைக் கொண்டாடுவோம்- பிரதமர் வாழ்த்து



தைப்பூசத்தை சுமூகமாக  கொண்டாட மத நல்லிணக்கமும், ஒற்றுமையும் முக்கியம் – மந்திரி புசார்  வலியுறுத்து



தைப்பூச விழா இன ஒற்றுமை, சகிப்புத்தன்மையின் அடையாளம்! அமைச்சர் கோபிந்த் சிங் புகழாரம்



அருள்மிகு வள்ளி தெய்வானை சமேத ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி வெள்ளி ரத ஊர்வலம் - தைப்பூச 2024



ஜனவரி 24 2024 அன்று பத்துமலையில் உள்ள ஸ்ரீ சுப்பிரமணியர் கோயிலில் தைப்பூசத் திருநாளில் இந்துக்கள் வேண்டுதல்களைச் செலுத்துகின்றனர்

## மக்கள் சேவை மேம்பட்டுக்கு மாவட்ட மற்றும்
# நகராட்சிகளின் தரம் உயர்த்தப்படும்



**ஷா ஆலம்-**

இவ்வாண்டு சிலாங்கூரில் உள்ள மாவட்ட மற்றும் நகராட்சிகளின் **(பிபிடி)** சேவைகளை மேலும் வலுப்படுத்த சிறப்பு குழு அமைக்கப்படும் என்று ஊராட்சி மன்றங்களுக்குப் பொறுப்பான ஆட்சிக்குழு உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

மக்களின் எதிர்பார்ப்புகளை சிறப்பாகக் கையாளுவதற்கான வழிமுறை மேம்படுத்த முன்னாள் ஊராட்சி தலைவர்கள், துறை இயக்குநர்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் **(என்ஜிஓக்கள்)** அமைப்பு உருவாக்கப்படும் என டத்தோ இங் சுய் லிம் கூறினார்.

"இக்குழு பிபிடிகள் பொதுமக்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதை உறுதி செய்வதற்காக அமைக்கப்படும். பொதுமக்களில் **50** சதவீதத்தினர் உள்ளூர் அரசாங்க சேவைகளில் திருப்தி அடைந்துள்ளனர் என மெர்டேக்கா மையம் **(சுயாதீனமான ஆராய்ச்சி அமைப்பு)** பதிவிட்டது. ஆனால் நாங்கள் இன்னும் அதை அதிகமாக விரும்புகிறோம்.

இதற்கிடையில், கிள்ளான் நகராண்மை கழகத்தை மாநகரமாக மாற்றும், அதிகாரப்பூர்வ அறிவிப்பு விழா அடுத்த பிப்ரவரி தொடக்கத்தில் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த செவ்வாயன்று, மேயராக நியமனம் செய்வதற்கான கடிதத்தை யாங் டி பெர்துவான் எம்.பி.கே. டத்தின் படுகா நோரைனி ரோஸ்லானிடம் மாநிலச் செயலாளர் டத்தோ செத்தியா ஹாரிஸ் காசிம் வழங்கினார்.

# கிரேட்டர் கிளாங் வெளி
## வாகன நெரிசலைக் குறைக்க முன்னெடுப்பு உதவும்

**சுபாங் ஜெயா-**

"கிரேட்டர் கிளாங் வெளி" என்னும் மகத்தான கிள்ளான் பள்ளத்தாக்கு நிர்வாக நிகழ்ச்சி நிரலில் பொது போக்குவரத்தை மறுசீரமைப்பு செய்வது முதன்மை இலக்காக இருக்கும் என்று முதலீடு, வர்த்தகம் மற்றும் போக்குவரத்து துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இங் ஸீ ஹான் கூறினார்.

போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கு ஏதுவாக பெட்டாலிங் ஜெயா, சுபாங் ஜெயா, ஷா ஆலம், கிள்ளான் ஆகிய நகரங்களில் தனியார் வாகன பயன்பாட்டை பொது போக்குவரத்து பயன்பாட்டிற்கு மாற்றுவதில் கவனம் செலுத்தப்படும் என்று அவர் சொன்னார்.

இதன் மூலம் மக்களின் வாழ்க்கை முறையை சிறப்பானதாகவும் மேலும் தரமிக்கதாகவும் உருவாக்க இயலும். அதோடு மட்டுமின்றி திறன்மிக்க மற்றும் உயர் மதிப்பு கொண்ட வேலை வாய்ப்புகளையும் இதன் மூலம் உருவாக்க இயலும் என்று அவர் குறிப்பிட்டார்.

இதன் வாயிலாக சிலாங்கூர் மக்கள் மாநிலத்தின் வாழ்க்கைத் தரத்திற்கேற்ப நியாயமான ஊதியத்தை பெறுவதற்குரிய வாய்ப்பு கிட்டும் என அவர் சொன்னார்.

இங்கு நடைபெற்ற சுபாங் ஜெயா மாநகர் மன்ற மக்கள் பிரதிநிதிகள் மன்றத்தின் விருதளிப்பு நிகழ்வில் உரையாற்றிய போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நான்கு முக்கிய நகரங்களை உள்ளடக்கிய மகத்தான கிள்ளான் பள்ளத்தாக்கு திட்டத்தை உருவாக்க இவ்வாண்டு வரவு செலவுத் திட்டத்தில் **20 லட்சம்** வெள்ளி ஒதுக்கப் பட்டுள்ளதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி முன்னதாக கூறியிருந்தார்.

# ஸ்மார்ட் பார்க்கிங்
# கட்டண முறை அமல்




**ஷா ஆலம்-**

பத்தாங் காலி மற்றும் கோலா குபு பாரு பகுதிகளில் ஸ்மார்ட் பார்க்கிங் கட்டண முறையின் இரண்டாம் கட்டம் தொடங்கியது.

ஸ்மார்ட் சிலாங்கூர் பார்க்கிங் **(SSP)** மற்றும் ஃப்ளெக்ஸி பார்க்கிங் செயலிகள் மூலம் பயனர்கள் பார்க்கிங் கட்டணத்தைச் செலுத்த வேண்டும் என்று உலு சிலாங்கூர் நகராண்மை கழகம் தெரிவித்தது.

இத்திட்டத்திற்கான முதல் கட்டம் டிசம்பர் **1** முதல் புக்கிட் பெருந்தோங் மற்றும் புக்கிட் செந்தோசாவில் அமல்படுத்தப்பட்டது.

காலை 8 மணி முதல் மாலை **6** மணி வரை **(திங்கள் முதல் வெள்ளி வரை)** பார்க்கிங் கட்டணம் ஒரு மணி நேரத்திற்கு **RM0.50** மற்றும் மாதத்திற்கு **RM50** ஆகும். சனி, ஞாயிறு மற்றும் பொது விடுமுறை நாட்கள் இலவசம் என தெரிவிக்கப்பட்டது.

மேலும் ஏதேனும் கேள்விகள் இருந்தால் **1-700-819-612 / 03-6064 1331** நீட்டிப்பு **135** என்ற ஹாட்லைனைத் தொடர்பு கொள்ளவும்.

# சாலை சரி செய்யும்
# பணியில் இன்ஃப்ராசெல்



**ஷா ஆலம்-**

போர்ட் கிள்ளான் மற்றும் உலு லங்காட் சாலை மேற்பரப்புகளை சீரமைக்கும் பணியில் இன்ஃப்ராசெல் ஈடுபட்டுள்ளது.

போர்ட் கிள்ளான் ஜாலான் தெலுக் கோங், பகுதியில் ஓரளவு பழுது பார்க்கும் பணிகள் முடிந்து விட்டதாகவும், நாளை அதிகாலையில் முழுமையாக முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் மாநில சாலை பராமரிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

போர்ட் கிள்ளான் மாநில சட்டமன்ற உறுப்பினர் அஸ்மிசாம் சமான் ஹூரியும் பராமரிப்புப் பணிகளை காண வந்திருந்தார்.

உலு லங்காட் ஜாலான் புக்கிட் பெராஸ் என்ற இடத்தில் புனரமைப்பு முறைகளைப் பயன்படுத்தி சேதமடைந்த சாலைகளை சரி செய்யும் பணியையும் இன்ஃப்ராசெல் மேற்கொண்டது.

பராமரிப்பு வேலைகள் **25** சதவீதத்தை எட்டியுள்ளது. அவை இந்த பிப்ரவரியில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று அவர் விளக்கினார்.

செய்து பொதுமக்கள் தங்கள் பகுதியில் உள்ள சாலைகள் பற்றி தொடர்ந்து புகார் அளிக்கலாம். அதனை **#INFRASEL #NamaJalan #Daerah** என்ற அடையாளத்துடன் பதிவேற்றம் செய்யலாம்.



# பொது வசதிகளின் கட்டுமானத்தை அதிகரிக்கும் முயற்சி தொடரும்

**ஷா ஆலம்-** இந்த ஆண்டு காஜாங் தொகுதியில் வசிப்பவர்களுக்காகப் பொது வசதிகளின் கட்டுமானத்தை அதிகரிக்கும் முயற்சி தொடரும் என அதன் சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

பண்டார் மஹ்கோத்தா செராஸ், சுங்கை செகாமாட் மற்றும் சுங்கை கந்தான் போன்ற பல பகுதிகளில் பொது சுகாதார கிளினிக்குகள் கட்டப்படுவதாக டேவிட் சியோங் கூறினார்.

"பல இடங்கள் அல்லது பகுதிகள் பொது சுகாதார மருத்துவமனையின் வளர்ச்சிக்கு ஏற்றதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன் மூலம், குடியிருப்பாளர்கள் தங்கள் வீடுகளிலிருந்து வெகுதூரம் பயணிக்க வேண்டியதில்லை.

"கிராமப் பகுதியின் காரணிகள் மற்றும் இந்த வசதி தேவைப்படும் பல குடியிருப்பாளர்களை நாங்கள் கருத்தில் எடுத்துக்கொள்கிறோம். இந்த விஷயம் விவாதிக்கப்படுகிறது," என்று அவரைத் தொடர்பு கொண்டபோது கூறினார்.

மேலும், காஜாங் மருத்துவமனைக்குச் செல்லும் பாதை குண்டும் குழியுமாக நோயாளிகளின் நிலைக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் இருப்பதை அவர் கண்டறிந்தார்.

"மேலும், இங்குள்ள எலும்பியல் கிளினிக்கில் மேற்கூரை வசதி இல்லாமல் இருப்பதைக் கண்டேன். இதனால், நோயாளிகள் அல்லது பராமரிப்பாளர்கள் மழை மற்றும் வெயில் காலங்களில் வேலை செய்ய சிரமப்படுகிறார்கள்," என்று அவர் கூறினார்.

அதே நேரத்தில், பி-பங்கிலான் சேவை ரைடர்களுக்கு ஒரு சிறிய நிறுத்தத்தைப் பண்டார் மஹ்கோத்தா செராஸ்யில் தனது தரப்பு உருவாக்கும் என்றும் டேவிட் தெரிவித்தார்.



# சிலாங்கூர் பென்யாயாங் திட்டத்திம் ரவாங்கில் சமூக மண்டபம் நிர்மாணிப்பு

**ஷா ஆலம்-** சிலாங்கூர் பென்யாயாங் திட்ட நிதியின் கீழ் **(பி.எஸ்.பி.)** ரவாங், பண்டார் கன்றி ஹோம், கம்போங்சுங்கைபாக்காவில்சமூக மண்டபம் நிர்மாணிக்கப்படுகிறது.

கடந்தாண்டு ஜூன் மாதம் தொடங்கப்பட்ட நான்கு லட்சம் வெள்ளி செலவிலான இந்த திட்டம் அடுத்த மாதம் முற்றுப் பெறும் என எதிர்பார்க்கப்படுவதாக ரவாங் சட்டமன்ற உறுப்பினர் சுவா வேய் கியாட் கூறினார்.

இந்த மண்டப நிர்மாணிப்பின் வழி சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த சுமார் **1,000** பேர் பயன்பெறுவர் என எதிர்பார்க்கப்படுவதாக சிலாங்கூர்கினிக்கு அளித்த பேட்டியில் அவர் குறிப்பிட்டார்.

இப்பகுதியில் பொது மண்டபம் இல்லாதது தொடர்பில் பொது மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற புகாரின் அடிப்படையில் இந்த திட்டம் கடந்தாண்டு ஜூன் மாதம் முன்னெடுக்கப்பட்டது என அவர் குறிப்பிட்டார்.

இந்த மண்டபத்தின் கட்டுமானப் பணிகள் ஏறக்குறைய **90 விழுக்காடு** பூர்த்தியடைந்து விட்டன. அடுத்த மாதம் இது பயன்பாட்டிற்கு வரும் என எதிர்பார்க்கிறோம். இந்த மண்டபத்தை பொது மக்கள் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதோடு வேண்டுமென்றே சேதம் விளைக்கும் செயல்களையும் தடுக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

பொது வசதிகளை மேம்படுத்துவது, தரம் உயர்த்துவது மற்றும் **15** ஆண்டுகளுக்கும் மேற்பட்ட மலிவு விலை மற்றும் நடுத்தர விலை அடுக்குமாடி குடியிருப்புகளைச் சீரமைப்பது ஆகிய பணிகளை மேற்கொள்ள மாநில அரசு கடந்த **2024ஆம்** ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் **2 கோடியே 40 லட்சம் வெள்ளியை** ஒதுக்கீடு செய்தது.

# பொது உள்கட்டமைப்புகளைப் பழுது பார்த்தல் மற்றும் உருவாக்க எண்ணம்



**ஷா ஆலம்-** பலகோங் தொகுதியில் வசிப்பவர்களின் வசதிக்காக பொது உள்கட்டமைப்புகளைப் பழுதுபார்த்தல் மற்றும் உருவாக்குவதற்கு அதன் மாநில சட்டமன்ற உறுப்பினர் எண்ணம் கொண்டுள்ளார்.

கடந்த நவம்பர் தொடங்கி **286,000 ரிங்கிட்** ஒதுக்கீட்டில் பத்து **11** சமூக மண்டபம், செராஸ்சில் மேம்பாடு பணி மேற்கொள்ளப் பட்டதாக வெயின் ஓங் சுன் வெய் கூறினார்.

"உள்ளூராட்சி அபிவிருத்தி அமைச்சிடம் இருந்து இந்த ஒதுக்கீடு முழுமையாகப் பெறப்பட்டுள்ளது. மேலும் பூப்பந்து மைதானத்துடன் கூடிய மண்டபம் இந்த பிப்ரவரியில் முழுமையாக நிறைவு பெறும் என எதிர்பார்க்கிறோம்.

"இந்த மண்டபத்தை ஒரு வேளையில் சுமார் **200** பயனர்கள் பயன்படுத்தக்கூடிய அளவில் சுற்றியுள்ள குடியிருப்பாளர்கள் கொண்டாட்டங்கள் அல்லது விளையாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இதைப் பயன்படுத்தலாம்" என்று அவர் சிலாங்கூர்கினியிடம் கூறினார்.

மேலும், பெர்சியாரான் சுஹாகாசே பண்டார் துன் ஹுசைன் ஓனில் பல்நோக்கு விளையாட்டு மைதானத்தையும் கட்ட திட்டமிட்டுள்ளதாக சுன் வெய் விளக்கினார்.

"பலகோங் தொடர்ந்து முன்னேறி வருவதை உறுதி செய்வதற்காக உள்ளூர்வாசிகள் காணவும் அவர்களின் புகார்களைக் கேட்கவும் நான் அப்பகுதியில் எனது களப்பயணங்களை மேற்கொள்வேன்" என்று அவர் தெரிவித்தார்.



# வசதி குறைந்தவர்களுக்கு உதவ பட்டியல் எடுப்பதில் தீவிரம்

**ஷா ஆலம்-** மேரு சட்டமன்ற உறுப்பினர் தொகுதியில் வசதி குறைந்தவர்களுக்கு உதவ, தன் தொகுதியில் உள்ள வசதி குறைந்தவர்கள் பற்றிய தகவல்களைத் தீவிரமாக சேகரித்து வருகிறார். சரியான தரப்புக்கு மாநில அரசின் உதவிகள் வழங்க இது அவசியமாகிறது.

நன்கொடைகளை வழங்குவதோடு அவர்களுக்கு மாநில உதவியை பெறுவதற்கான தகுதி **(சிலாங்கூர் ஜகாத் வாரியம் (LZS)** மற்றும் சமூக நலத் துறையிடம் **(JKM)** உள்ளதா என்பதைத் தனது தரப்பு சரிபார்ப்பதாக மரியம் அப்துல் ரஷீட் கூறினார்.

"நாங்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வாரத்தில் குறைந்தது ஐந்து குடும்பங்களை சந்திப்போம். நாங்கள் பண உதவி, ரஹ்மா உணவு கூடைகள் மற்றும் சக்கர நாற்காலிகள் போன்ற பிற தேவைகளை வழங்குகிறோம்.

"அதற்குப் பிறகு, அவர்கள் மாநில உதவி, **"LZS"** அல்லது **JKM** பெற தகுதியுடையவர்களா என்பதை நாங்கள் சரி பார்ப்போம். தகுதி இருந்தால், அவர்கள் பதிவு பெற நாங்கள் உதவுவோம்," என்று அவர் சிலாங்கூர்கினியிடம் கூறினார்.

"கஷ்டத்தில் உள்ளவர்களின், நோய் வாய்ப்பட்டவர்கள் அல்லது உதவி தேவைப்படுபவர்கள் பற்றிய தகவல்களை உடனடியாகச் சேவை மையத்திற்குத் தெரிவிக்கவும். அவர்களின் சுமையைக் குறைக்க முயற்சிப்போம்," என்று மரியம் கூறினார்.

# வடிகால் மேம்படுத்தும் பணி
## 90 சதவீத நிறைவு



**ஷா ஆலம்-**

தாமான் ஸ்ரீ மூடாவில் வடிகால் அமைப்பை மேம்படுத்தும் பணி **90சதவீத** முன்னேற்றத்தை எட்டியுள்ளதால், தற்போது அப்பகுதியில் ஏற்பட்டுள்ள திடீர் வெள்ளத்தை கட்டுப்படுத்துவதில் சாதகமான நிலை ஏற்பட்டுள்ளது.

புதிய வடிகால் கட்டுமானம் மற்றும் வடிகால் சுத்திகரிப்பு திட்டத்தின் முன்னேற்றத்தைத் தனது தரப்பு தொடர்ந்து கண்காணித்து வருவதாக கோத்தா கெமுனிங் சட்டமன்ற உறுப்பினர் எஸ் பிரகாஷ் கூறினார். இப்பணி ஜனவரி 24 **ஆம்** தேதி முழுமையாக நிறைவடையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

"சில பகுதிகளில் திடீர் வெள்ளம் ஏற்பட்டதாக எங்களுக்கு மேலும் புகார்கள் வந்தாலும், கனமழையின் போது நீரோட்டத்தை எளிதாக்குவதற்கு லோட் 1325, ஜாலான் பத்து லாப்பனில் உள்ள தாழ்வான பகுதியைச் சுத்தம் செய்வதன் மூலம் குறுகிய கால தீர்வுகள் உட்பட முயற்சிகளை மேம்படுத்த வேண்டும்.

"வீடுஎப்போதும்சுத்தமாகஇருப்பதைஉறுதிசெய்து, திடீர் வெள்ளத்தைத் தவிர்க்க ஒன்றாக இணைந்து வேலை செய்ய குடியிருப்பாளர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்," என்று அவரைத் தொடர்பு கொண்டபோது கூறினார்.

**டிசம்பர்** 11 அன்று, சம்பந்தப்பட்ட பகுதியில் ஏற்பட்ட வெள்ளப் பிரச்சனையைச் சமாளிக்கும் நோக்கத்துடன், ஜூலை 2021 முதல் தாமான் ஸ்ரீ மூடாவில் 6.8 **மில்லியன் ரிங்கிட்** மதிப்பிலான வடிகால் அமைப்பை மேம்படுத்தும் பணி தொடங்கப் பட்டதாகத் தெரிவித்தார்.

திட்டத்தின் முக்கிய நோக்கம் தடுப்பு பாதுகாப்பு, திருகு பம்புகளை நிறுவுதல், குவாட்டர்ஸ் கட்டுமானம், 'காம்பாக்ட் சப்' மற்றும் மின் பொருட்களை உள்ளடக்கியது.



# இலவச மருத்துவப் பரிசோதனை திட்டத்திற்கு வெ.70,000 ஒதுக்கீடு

**ஷா ஆலம்-**

இவ்வாண்டு கோத்தா அங்கிரிக் தொகுதியில் மூன்று இலவச மருத்துவப் பரிசோதனை இயக்கங்களை நடத்த தொகுதி சட்டமன்ற உறுப்பினர் **70,000 வெள்ளியை** ஒதுக்கீடு செய்துள்ளார்.

முதல் மருத்துவப் பரிசோதனை இயக்கம் நேற்று இங்குள்ள செக்சன் 11, டேவான் ஜென்ஜாராமில் நேற்று நடைபெற்றதாகக் கூறிய தொகுதி உறுப்பினர் நஜ்வான் ஹலிமி, அடிப்படை மருத்துவப் பரிசோதனையைப் பெற விரும்பும் **40** வயதுக்கும் மேற்பட்டவர்கள் உட்பட சுமார் **15,000 பேர்** இத்திட்டங்கள் மூலம் பயனடைவார்கள் என்று சொன்னார்.

முப்பது வயதுக்கும் மேற்பட்ட பெண்களுக்கு மேமோகிராம் மற்றும் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் இலவச கண் பரிசோதனைகளும் மலிவு விலையில் மூக்கு கண்ணாடிகளைப் பெறுவதற்கான வாய்ப்பும் உள்ளது என்று நஜ்வான் கூறினார்.

புக்கிட் சுபாங் மற்றும் டெனாய் ஆலமில் இந்த மருத்துவ பரிசோதனைகளை நடத்த திட்டமிட்டுள்ளோம். மேலும் குறைந்த வருமானம் பெறும் **பி40** தரப்பினர் இங்கு அதிகமாக வசிக்கின்றனர் என்று அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில், இந்த மருத்துவ முகாமில் கலந்துகொள்பவர்களுக்கு மாநில அரசின் இல்திஸாம் சிலாங்கூர் நலத்திட்டங்கள் குறித்து விளக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதே சமயம், நிகழ்வின் பங்கேற்பாளர்களுக்கு மத்திய அரசின் மத்திய தரவுத்தள மையம் **(பாடு)** தொடர்பான குறித்த விரிவான விளக்கமும் அளிக்கப்பட்டது என்றார் அவர்.

# 200 பள்ளி மாணவர்களுக்கு
## இலவச மூக்குக் கண்ணாடிகள்



**ஷா ஆலம்-**

பண்டமாரான் தொகுதியில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த **(பி40)** மொத்தம் 200 பள்ளி மாணவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படும்.

அடுத்த மாத இறுதியில் இந்த உதவி வழங்கப்படும். மேலும், இந்த உதவி கற்றலின் போது சம்பந்தப்பட்ட மாணவர்களை ஊக்குவிக்கும் எனவும் நம்புவதாக சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

"இந்த உதவியின் மூலம் மாணவர்களை ஊக்குவிப்பதோடு, வகுப்பில் கற்பித்தல் மற்றும் கற்றலின் போது அவர்கள் முழுமையாகக் கவனம் செலுத்த முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்" என லியோங் தக் சீ சிலாங்கூர்கினியிடம் கூறினார்.

கல்வி நிறுவனங்கள் சிறந்த தலைமுறையை உருவாக்குவதற்கான தொடக்கமாக இருப்பதால் பள்ளிகளுக்கு உதவி வழங்குவதே தனது முன்னுரிமை என்றும் அவர் கூறினார்.

"கடந்த ஆண்டு இந்த தொகுதியில் **RM300,000** க்கு மேல் **40** பள்ளிகளுக்கு வழங்கினோம். இந்த ஆண்டும் பள்ளிகளின் தேவைகளைக் கண்டறிய நாங்கள் தொடர்ந்து முயற்சி செய்வோம்," என்று அவர் கூறினார்.

கிள்ளானில் உள்ள தெங்கு அம்புவான் ரஹிமா மருத்துவமனையில் நோயாளிகளின் பயன்பாட்டிற்காக தனது தரப்பு **10** சக்கர நாற்காலி களையும் வழங்கியதாகக் கூறினார்.

# 40 வயதுக்கும் கீழ் பட்டவர்கள்
## மாரடைப்பு, பக்கவாதம் தொடர்பான மரணங்கள் அதிகரிப்பு

**கோலாலம்பூர்-**

நாட்டில் 40 வயதுக்கும் கீழ் பட்டவர்கள் மத்தியில் திடீர் மரணங்கள் அதிகரித்து வருகின்றன. மாரடைப்பு மற்றும் பக்கவாதம் போன்ற நோய்கள் காரணமாக நடுத்தர வயதினர் மத்தியில் இத்தகைய திடீர் மரணங்கள் சம்பவிக்கின்றன.

நாட்டில் **கோவிட்**-19 பெருந்தொற்று ஏற்பட்டதால் நீண்ட காலமாக உடற்பயிற்சி செய்யாமல் இருந்து திடீரென பயிற்சி நடவடிக்கைகளை அதிகரிக்கும் காரணத்தால் இருதய இரத்த நாள அமைப்பில் அதிர்ச்சி ஏற்படுவது இத்தகைய மரணங்களுக்கு காரணமாக இருக்கலாம் என்று ஹார்ட் பிட் இ-இசிபி நல்வாழ்வு மையத்தின் நிறுவனர் டாக்டர் எஸ். டினேஷ் கூறினார்.

பெருந்தொற்று காலத்தில் நமது சமுதாயத்தில் உடற்பயிற்சி செய்யும் பழக்கம் வெகுவாக குறைந்து விட்டது. கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டவுடன் நம்மில் பலர் மிகவும் தீவிரமாக உடற்பயிற்சிகளில் ஈடுபட்டதன் காரணமாக சம்பந்தப்பட்டத் தரப்பினர் மத்தியில் திடீர் மரணங்கள் அதிகரிக்கத் தொடங்கின என்றார் அவர்.

நீண்ட நாட்களாக உற்பயிற்சி செய்யாமலிருந்து திடீரென பயிற்சிகளில் தீவிரம் காட்டும் போது நமது உடல் திடீர் அதிர்ச்சியை எதிர்கொள்ளும் என்று பெர்னாமா டிவிக்கு அளித்த பேட்டியில் அவர் குறிப்பிட்டார்.

மாரடைப்பு திடீர் மரணங்கள் திடீரென சம்பவிக்கும் என்பதால் அதற்கான அறிகுறிகளை கண்டறிவது கடினமாகும். வாழ்க்கை முறை மற்றும் உணவுப் பழக்கங்களில் மாறுதல்களைச் செய்வதன் மூலம் இத்தகைய ஆபத்துகளைத் தவிர்க்கலாம் என அவர் தெரிவித்தார்.

# அரசு ஊழியர்களுக்கான ஓய்வூதியத் திட்ட

## மறு ஆய்வு – அரசியல்வாதிகளுக்கும் பொருந்தும்

**கோலாலம்பூர்-**

பொதுச் சேவை ஊதியத் திட்டத்தை மறுஆய்வு செய்த பிறகு எடுக்கப்படும் எந்த முடிவும் நாட்டிலிலுள்ள அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் நியமனம் செய்யப்பட்டவர்களுக்கும் பொருந்தும் என்று பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் தெரிவித்தார்.

இருப்பினும், பல்வேறு தரப்பினரின் கருத்துக்கள் மற்றும் கூட்டரசு அரசியலமைப்பின் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய விரிவான ஆய்வுகளுக்குப் பின்னரே இந்த விவகாரம் அமைச்சரவையால் இறுதி செய்யப்படும் என்று அவர் கூறினார்.

அரசு ஊழியர்களுக்காக எடுக்கும் எந்த முடிவும் அரசியல்வாதிகளுக்கும் பொருந்தும். வரும் **2024** பிப்ரவரி **1** முதல் அரசு ஊழியர்களுக்கான ஓய்வூதியம் அல்லாத நியமனத்தை நாங்கள் தொடங்கவிருக்கிறோம். அதுவே அனைத்து அரசியல் நியமனங்களுக்கும் பொருந்தும் என்றார் அவர்.

அரசியல்வாதிகள், குறிப்பாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கான ஓய்வூதியத் திட்டத்தை மறுபரிசீலனை செய்யுமாறு பொதுச் சேவைத் துறை ஊழியர்கள் தொழிற்சங்கமான கியூபெக்ஸ் அரசாங்கத்தை வலியுறுத்தியது.

சராசரியாக **30** ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றும் அரசு ஊழியர்களுடன் ஒப்பிடும்போது சுமார் ஐந்து ஆண்டுகள் மட்டுமே அரசியல்வாதிகள் பணியாற்றுவதால், அவர்களுக்கான ஓய்வூதியத்தை ரத்து செய்வது குறித்து அரசாங்கம் முதலில் பரிசீலிக்க வேண்டும் என்று அதன் தலைவர் டத்தோ அட்னான் மாட் கூறியிருந்தார்.

ஏழை நெல் விவசாயிகளுக்கு உதவுவதற்காக **6 கோடி** வெள்ளியை வழங்க பாடி பெராஸ் நேஷனல் நிறுவனத்திற்கு உத்தரவிட்ட அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு **96** விழுக்காடு மக்கள் ஆதரவு தெரிவித்துள்ள நிலையில் இரு விழுக்காட்டினர் மட்டுமே எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

நாட்டில் மிகவும் வறிய நிலையை துடைத்தொழிப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு **93** விழுக்காட்டினர் ஆதரவைப் புலப்படுத்தி உள்ளனர். இத்திட்டத்திற்கு மூன்று விழுக்காட்டினரிடமிருந்து ஆட்சேபம் எழுந்துள்ளது.

ஏழைக் குடும்பங்களுக்கு உதவும் நோக்கிலான ரஹ்மா ரொக்க உதவித் திட்டத்துக்கு கூடுதலாக **60 கோடி வெள்ளியை** ஒதுக்கும் அரசின் முன்னெடுப்பு **93** விழுக்காட்டினர் வரவேற்பைப் பெற்றுள்ளது.

# விமானச் சேவையை மேம்படுத்த பேச்சு

**பேங்காக்-**

தாய்லாந்தில் விமானச் சேவையை அதிகரிப்பது மற்றும் பிராந்திய விமானப் போக்குவரத்து மையமாக அதன் நிலையை மேம்படுத்துதல் குறித்து விவாதிக்க தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் கேபிட்டல் ஏ பெர்ஹாட் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி டான் ஸ்ரீ டோனி பெர்னாண்டஸைச் சந்தித்தார்.

பொருளாதாரத்திற்கு உத்வேகம் அளிப்பதற்கு ஏதுவாக பெரிய மற்றும் இரண்டாம் நிலை நகரங்களை இணைக்கும் வகையில் நாட்டிற்கு வரும் மற்றும் வெளியில் செல்லும் விமானப் பயணங்களை அதிகரிக்க திட்டமிட்டுள்ளோம் என்று ஸ்ரேத்தா தனது எக்ஸ் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தாய்லாந்தில் உள்ள விமான நிறுவனங்களுக்கான வெளிநாட்டு பங்குரிமைவரம்புகளைப்பற்றிவிவாதிக்க டோனி பெர்னாண்டஸை ஸ்ரேத்தாவைச் சந்திப்பார் என்று உள்ளூர் ஊடகங்கள் முன்னதாகத் தெரிவித்திருந்தன.

# மலேசியர்களுக்கு

## பிரகாசமான எதிர்காலம்

**கோலாலம்பூர்-**

ஒற்றுமை அரசாங்கம் நல்வாழ்வை உறுதி செய்யும் வகையில் பொருளாதார வளர்ச்சியில் கவனம் செலுத்தி வரும் நிலையில் இன்று மலரும் **2024** ஆம் ஆண்டு நாட்டு மக்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை ஏற்படுத்தும் என்று பிரதமர்டத்தோஸ்ரீஅன்வார்இப்ராஹிம் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மலேசியாவை இப்பிராந்தியத்தில் சிறந்த நாடாக மாற்றுவதற்கான முயற்சிகளை தீவிரப்படுத்துமாறு அமைச்சர்கள், மூத்த அதிகாரிகள், அமலாக்கத் தரப்பினர் பாதுகாப்பு அமைப்புகள், அரசு ஊழியர்கள் மற்றும் தனியார் துறையை அவர் வலியுறுத்தினார்.

**2023** ஆம் ஆண்டுக்கு விடை கொடுக்கும் சூழலில் நமது பொருளாதார வளர்ச்சி நான்கு சதவீதமாக பராமரிக்கப்பட்டு வருகிறது என்பதைப் பொதுமக்களுக்கு சுருக்கமாக அறிவிப்பது பொருத்தமானது எனக் கருதுகிறேன் என அவர் குறிப்பிட்டார்.

இது மிகச் சிறந்த ஒன்றாகும். ஆனால் பணவீக்கத்தை இரண்டு சதவீதத்திற்கும் குறைவாகக் குறைப்பது மற்றும் வேலையின்மை விகிதத்தை மிகக் குறைந்த அளவிற்கு குறைப்பது உட்பட பிற பணிகளும் உள்ளன என்று அவர் தனது முகநூலில் நேற்றிரவு வெளியிட்ட காணொளியில் கூறினார்.

அதே நேரத்தில், மலேசிய ஊழல் தடுப்பு ஆணையம், அரச மலேசிய போலீஸ் படை, அரச மலேசிய சுங்கத் துறை மற்றும் உள்நாட்டு வருமான வரி வாரியம் ஆகியவை தங்கள் கடமைகளை திறம்பட நிறைவேற்றியதற்காக அவர் பாராட்டு தெரிவித்தார்.

# நிலையான தவணைக்கால நாடாளுமன்றச்

## சட்டம் தொடர்பில் கருத்திணக்கம் காணப்படவில்லை

**செர்டாங்-**

நிலையானதவணைக்காலநாடாளுமன்றச் சட்டத்தை இயற்றுவது தொடர்பில் இதுவரை ஒற்றுமை அரசுத் தலைவர்களிடையே ஒருமித்த கருத்து எட்டப்படவில்லை என்று பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் தெரிவித்தார்.

அத்தகையச் சட்டத்தை இயற்றுவது அரசாங்கத்தின் தற்போதைய முன்னுரிமை இல்லை என்று நிதியமைச்சருமான அவர் கூறினார்.

அத்தகைய விவாதத்தை நான் எதிர்பார்க்கிறேன். அதே நேரத்தில், இது குறித்து முடிவு செய்வதற்கு இன்னும் தருணம் வரவில்லை. ஏ.ஜி.யிடமிருந்து (சட்டத் துறைத் தலைவர்) எங்களுக்கு எந்தக் கருத்தும் கிடைக்கவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

நிலையான கால நாடாளுமன்ற தவணைக்காலம் தொடர்பில் துணைப் பிரதமர் டத்தோஸ்ரீ டாக்டர் அகமது ஜாஹிட் ஹமிடி வெளியிட்ட கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் அன்வார் இவ்வாறு சொன்னார்.

இந்த நிலையான தவணைக்கால சட்ட அமலாக்கம் மூலம் பதவிக்காலம் முடியும் வரை அல்லது அடுத்த பொதுத் தேர்தல் வரை நடப்பு அரசாங்கத்தின் ஆட்சி நீடிக்கும் என ஜாஹிட் தெரிவித்திருந்தார்.

அவர்கள் இப்போது மிகவும் பலவீனமாக உள்ளனர், அவர்களுக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் ஒரு பங்கு இடங்கள் கூட இல்லை. எனவே நாம் ஏன் இதை விவகாரமாக்க வேண்டும்? என்றார் அவர்.





# இழப்பை எதிர்நோக்கும் கிராம மேம்பாட்டு

## அமைச்சின் துணை நிறுவனங்கள் மூடப்படும்

**புத்ராஜெயா-**
இலாபத்தை ஈட்டித் தராதக் கிராம மற்றும் வட்டார மேம்பாட்டுத் துறை அமைச்சின் துணை நிறுவனங்கள் மூடப்படும் அல்லது மறுசீரமைப்பு செய்யப்படும் என்று துணைப் பிரதமர் டத்தோஸ்ரீ டாக்டர் அகமது ஜாஹிட் ஹமிடி எச்சரித்துள்ளார்.

தங்கள் நிறுவனத்தின் செயலாக்கத்தை கண் காணிக்கும்படி அமைச்சின் கீழுள்ள அனைத்து நிறுவனங்களின் தலைவர்களும் பணிக்கப்பட்டுள்ளதாகக் கிராம மற்றும் வட்டார மேம்பாட்டுத் துறை அமைச்சருமான அவர் தெரிவித்தார்.

அந்த நிறுவனங்களை லாபகரமானதாக ஆக்குங்கள். இலாபம் தராத பட்சத்தில் அவை லாபகரமானதாக்கு வதற்கான வழிவகைகளைச் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் ஆராய வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

அவ்வாறு செய்யாத பட்சத்தில் அந்நிறுவனங்கள் மூடப்பட வேண்டும் என்பது எனது உத்தரவாகும். இழப்பை எதிர்நோக்கும் நிறுவனங்கள் அல்லது அமைப்புகளுக்கு நாம் இனியும் நிதியளிக்க முடியாது என்பதால் இந்நடவடிக்கை அவசியமானதாக உள்ளது என்றார் அவர்.

மூடப்பட்ட நிறுவனங்களை வாங்கிக் கொள்ளும்படி சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் நிர்வாகங்களை நாங்கள் கேட்டுக் கொண்டுள்ளோம்.

அவர்கள் அமைச்சை விட்டு வெளியேற விரும்பினால் குறைந்தபட்சத் தொகையை நாங்கள் வழங்குகிறோம் என்று இங்கு நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் அவர் தெரிவித்தார்.

# வெ.70 கோடி விளம்பரச் செலவு

## - எம்.ஏ.சி.சியின் விசாரணை



**கோலாலம்பூர்-**
முந்தைய இரு அரசு நிர்வாகங்கள் விளம்பரம் மற்றும் பிரபலப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக **70 கோடி வெள்ளியைச்** செலவு செய்தது தொடர்பில் மலேசிய ஊழல் தடுப்பு ஆணையம் எம்.ஏ.சி.சி.) நடத்தி வரும் விசாரணைக்கு உதவ தகவல் தொடர்பு அமைச்சு தயாராக உள்ளதாக அதன் அமைச்சர் பாஹ்மி பாட்சில் தெரிவித்தார்.

விசாரணை அமைப்புகளைப் பொறுத்தவரை, தேவை ஏற்பட்டால் இந்த அமைச்சு உட்பட எங்கும் விசாரணை நடத்துவது அவர்களுக்கு உள்ள உரிமையாகும் என்று அவர் செய்தியாளர் சந்திப்பின் போது கூறினார்.

விளம்பர மற்றும் பிரபலப்படுத்தும் நோக்கங்களுக்காக கடந்த **2020** மற்றும் **2022**ஆம் ஆண்டுக்கு இடையில் **70 கோடி வெள்ளி** ஒதுக்கப்பட்டதில் அரசாங்கத்தின் செலவு செயல்முறைகள் மற்றும் நடைமுறைகள் பின்பற்றப்பட்டதா என்பது தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு வருவதாக எம்.ஏ.சி.சி.யின் புலனாய்வுப் பிரிவின் மூத்த இயக்குநர் டத்தோஸ்ரீ ஹிஷாமுடின் ஹஷிம் முன்னதாகக் கூறியிருந்தார்.

கடந்த ஆண்டு நவம்பரில் நடைபெற்ற மக்களவைக் கூட்டத்தின் போது பத்து தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் பி. பிரபாகரன் எழுப்பிய கேள்விக்குப் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் வழங்கிய பதிலின் அடிப்படையில் இந்த விசாரணை தொடங்கப்பட்டது.

கடந்த **2020** முதல் இதுவரை அச்சு, இலக்கவியல் மற்றும் தொலைக்காட்சி உள்ளிட்ட அனைத்து ஊடக தளங்களிலும் அரசின் சாதனைகளை வெளிப்படுத்தும் வகையில் விளம்பர மற்றும் பிரபலப்படுத்தும் பணிகளுக்காக அரசாங்கம் செலவிட்ட மொத்தத் தொகையை வெளியிடுமாறு பிரதமரிடம் பிரபாகரன் கோரிக்கை விடுத்திருந்தார்.

# ஒருங்கிணைந்த மதிப்பீட்டு மேலாண்மை

## செயல்பாட்டை மேம்படுத்த கல்வி அமைச்சகம் எண்ணம்

**கோலாலம்பூர்-**
ஒருங்கிணைந்த மதிப்பீட்டு மேலாண்மை அமைப்பின் **(SPPB)** செயல்பாட்டை மேம்படுத்த கல்வி அமைச்சகம் **(KPM)** பல முக்கிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தற்போது அது மெதுவாகச் செயல்படுவதாகக் கூறப்படுகிறது, இது சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு அணுகுவது கடினமாக உள்ளது.

இந்த நடவடிக்கையில் நிரலாக்க குறியீட்டை மேம்படுத்துதல், சர்வர் திறனை அதிகரித்தல் மற்றும் சர்வர் உள்ளமைவு ட்யூனிங்கைச் மேம்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

"ஒருங்கிணைந்த மதிப்பீட்டு மேலாண்மை அமைப்பின் பயன்பாடு தொடர்பாக ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களைப் பற்றி கல்வி அமைச்சு கவலை கொண்டுள்ளது. அவற்றின் செயல்பாட்டிற்கான கண்காணிப்பு "விண்ணப்ப செயல்திறன் கண்காணிப்பு" **(APM)** பயன்பாட்டின் மூலம் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது.

"பயனர் அணுகலில் அதிகரிப்பு இருப்பதைக் கண்காணிப்பு முடிவுகள் கண்டறிந்தது. இதனால் அதிக தரவு காரணமாக முழு கணினியும் மெதுவாகிறது" என்று அறிக்கை கூறுகிறது.

ஒருங்கிணைந்த மதிப்பீட்டு மேலாண்மை அமைப்பு என்பது அனைத்து வகையான கல்வி அமைச்சின் தொடர்ச்சியான மற்றும் விரிவான மதிப்பீடு மேலாண்மை அமைப்பாகும்.

கல்வி மற்றும் கலாச்சார அமைச்சகம் எப்போதும் ஒருங்கிணைந்த மதிப்பீட்டு மேலாண்மை அமைப்பின் செயல்பாட்டை மேம்படுத்த முயற்சிக்கிறது. ஒருங்கிணைந்த மதிப்பீட்டு மேலாண்மை அமைப்பு பற்றிய ஏதேனும் கேள்விகள் அல்லது புகார்கள் இருந்தால் **03-8884 3632** என்ற ஹாட்லைனைத் தொடர்புகொள்வதன் அல்லது **ICT** சேவை டெஸ்க் **(ISD) https://isd.moe.gov.my/** மூலம் சமர்ப்பிக்கலாம்.

# ரப்பர் தோட்டத் துறைக்கு

## 80,000 தொழிலாளர்கள் தேவை

**புத்ராஜெயா-**
சிறு தோட்டக்காரர்களுக்குச் சொந்தமான சுமார் **4,20,000** ஹெக்டர் ரப்பர் தோட்டங்கள் எதிர்நோக்கும் ஆள்பலத் தேவையை பூர்த்தி செய்ய அத்துறையில் சுமார் **80,000** தொழிலாளர்கள் தேவைப்படுவதாக தோட்டத் தொழில் மற்றும் மூலப்பொருள் துறை அமைச்சர் டத்தோஸ்ரீ ஜோஹாரி அப்துல் கானி தெரிவித்தார்.

சுமார் **420,000** ஹெக்டர் ரப்பர் தோட்டங்கள் உள்ளன. எங்களுக்கு **70,000** முதல் **80,000** தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர் என இன்று தோட்டத் தொழில் மற்றும் மூலப்பொருள் துறை அமைச்சின் மாதாந்திர ஒன்றுகூடும் நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர் சந்திப்பில் அவர் கூறினார்.

ஆள்பலப் பற்றாக்குறை காரணமாக சிறு தோட்டக்காரர்களுக்குச் சொந்தமான **420,000** ஹெக்டர் ரப்பர் தோட்டங்களில் பால் வெட்டுத் தொழில் மேற்கொள்ளப்படாததால் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 230 கோடி வெள்ளி இழப்பு ஏற்பட்டதாக ஜோஹாரி கடந்த மாதம் **29**ஆம் தேதி கூறியிருந்தார்.

கடந்த **10 ஆண்டுகளில்,** ரப்பர் உற்பத்தியின் அளவு குறைந்துள்ளது. தொழிலாளர் பற்றாக்குறை, அதிக உற்பத்தி செலவுகள் மற்றும் பொருளாதார ரீதியில் பலன் தராத தோட்டங்களின் அளவு உள்ளிட்டவை இதற்கு காரணம் என அடையாளம் காணப்பட்டுள்ளன.

வெளிநாட்டுத் தொழிலாளர்கள் உட்பட தொழிலாளர்களின் நலன் சார்ந்த அம்சங்களுக்கு முதலாளிகள் முக்கியத்துவம் தர வேண்டும் என்பதோடு அவர்களுக்கு முறையான தங்குமிட வசதிகளை வழங்குமாறும் அவர் வலியுறுத்தினார்.

# வான் போக்குவரத்துத் துறை

## 2024ஆம் ஆண்டில் துரித வளர்ச்சி காணும்

**சிப்பாங்-**
வான் போக்குவரத்துத் துறைக்கு புத்துயிரளிப்பதற்கான அரசாங்கத்தின் தற்போதைய முயற்சிகளால் அத்துறை இவ்வாண்டு வலுவான வளர்ச்சியைக் காண எதிர்பார்க்கப்படுகிறது என்று போக்குவரத்து அமைச்சர் அந்தோணி லோக் கூறினார்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயணங்களின் அதிகரிப்பை மேற்கோள் காட்டிய அவர், அரசாங்கத்தின் வியூக நடவடிக்கைகள் குறிப்பாக சீன மற்றும் இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கான விசா தேவைகளை தளர்த்துவது இந்தத் துறைக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்றார்

சீனா மற்றும் இந்தியா போன்ற முக்கிய சந்தைகளில் இருந்து மட்டுமல்ல, சிங்கப்பூர், இந்தோனேசியா, தாய்லாந்து மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளிலிருந்தும் குறிப்பிடத்தக்க பயணிகளின் வருகையை மலேசியா பதிவு செய்துள்ளதை லோக் சுட்டிக்காட்டினார்.

ஆசிய நாடுகளுக்கிடையில் அதிகரித்துவரும் இந்த பயணச் சேவை ஒரு வழக்கமான நிகழ்வாக இருந்தாலும், இப்பிராந்தியத்தில் உள்ள நாடுகளுக்கு இடையே சிறந்த இணைப்பை வளர்க்கக்கூடிய சாதகமான நிலையில் மலேசியா இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# காற்பந்து திடல்களை மேம்படுத்த வெ70 லட்சம் ஒதுக்கீடு



**இஸ்கந்தார் புத்ரி-**

தேர்ந்தெடுக்கப்பட்ட விளையாட்டரங்குகளில் வடிகால் முறையை மேம்படுத்துவது மற்றும் புற்களைப் பதிப்பது போன்ற பணிகளை மேற்கொள்ள அனைத்து மாநிலங்களுக்கும் 70 **லட்சம் வெள்ளியை** இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு மானியமாக வழங்கவுள்ளது.

இந்த மானியத் திட்டத்தின் வாயிலாக அனைத்து மாநிலங்களும் தலா **500,000 வெள்ளி** நிதி ஒதுக்கீட்டைப் பெறும். அதில் **300,000 வெள்ளி** வடிகால்களை தரம் உயர்த்துவதற்கும் **200,000 திடல்களில்** புற்களைப் பதிப்பதற்கும் பயன்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டார்.

அந்த திடல்கள் தரம் உயர்த்தப்பட்டவுடன் அவற்றை முறையாகப் பராமரிப்பதற்கு ஏதுவாக ஒவ்வொரு மாநிலத்திற்கும் தாம் தலா **300,000 வெள்ளியை** வழங்குவதாக ஜோகூர் டாருள் தாக்ஸிம் கால்பந்து கிளப்பின் **(ஜே.டி.டி.)** உரிமையாளர் துங்கு மக்கோத்தா ஜொகூர் துவாங்கு இஸ்மாயில் சுல்தான் இப்ராஹிம் அறிவித்துள்ளார் என அவர் சொன்னார்.

மாநில அரசுகளிடம் ஒப்படைக்கப்படும் அமைச்சின் மானியத்தின் மூலம் திடலை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டவுடன் பராமரிப்பு பணிகளுக்காக துங்கு மக்கோத்தா தனது பங்காக **300,000** லட்சம் வெள்ளியை வழங்குவார் என்றும் அவர் கூறினார்.

# 2024 சுக்மா போட்டியில் முதல் மூன்று இடங்களுக்கு சிலாங்கூர் இலக்கு



**ஷா ஆலம்-**

இவ்வாண்டு ஆகஸ்டு மாதம் **17 முதல் 24** வரை சரவா மாநிலத்தில் நடைபெறவிருக்கும் 21வது மலேசிய விளையாட்டுப் போட்டியில் (சுக்மா) முதல் மூன்று இடங்களில் ஒன்றைப் பெற சிலாங்கூர் இலக்கு நிர்ணயித்துள்ளது.

தீவிரப் பயிற்சி, உடல் மற்றும் மனோ ரீதியான கண்காணிப்புக்குப் பிறகு இப்போட்டியில் களம் காண்பதற்கான முழு தயார் நிலையில் மாநில விளையாட்டாளர்கள் உள்ளதாக விளையாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் நஜ்வான் ஹலிமி கூறினார்.

இறைவன் அருளால **2024**ஆம் ஆண்டு சுக்மா போட்டிக்கு நாங்கள் முழு தயார் நிலையில் உள்ளதோடு சிறப்பான ஆட்டத் திறனையும் வெளிப்படுத்துவோம். முந்தைய சுக்மா போட்டிகளை விட இம்முறை சிலாங்கூர் சிறப்பான முடிவுகளைப் பதிவு செய்யும் என நம்புகிறோம் என அவர் குறிப்பிட்டார்.

முதல் மூன்று இடங்களில் ஒன்றைப் பெற நாங்கள் இலக்கு நிர்ணயித்துள்ளோம். முதலாவது இடத்தைப் பிடித்தால் அது போனஸ் வெற்றியாக இருக்கும். அதிகமான தங்கப் பதக்கங்களைப் பெறுவதற்கு நாங்கள் கடுமையாகப் பாடுபடுவோம் என்பது திண்ணம் என்றார் அவர்.

எனினும், தடகளம், நீச்சல், தரை போவ்லிங், குறிசுடுதல், அம்பு எய்தல் உள்ளிட்ட போட்டிகளில் அதிக பதக்கங்களைப் பெற முடியும் என சிலாங்கூர் அணி நம்புகிறது என அவர் சொன்னார்.




# எம்.ஏ.சி.சி.யிடம் அறிவிக்கத் தவறிய சொத்துகளின் நீண்ட பட்டியல்

**கோலாலம்பூர்-**

முன்னாள் நிதியமைச்சர் துன் டாயிம் தனக்குச் சொந்தமான 71 சொத்துகளை மலேசிய ஊழல் தடுப்பு ஆணையத்திடம் **(எம்.ஏ.சி.சி.)** அறிவிக்கத் தவறியதால் டாயிம் ஜைனுடிக்கு எதிராக கோலாலம்பூர் செஷன்ஸ் நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கடந்தாண்டு டிசம்பர் மாதம் **13** ஆம் தேதிக்குள் சொத்துக்கள் தொடர்பான விபரங்களை ஊழல் தடுப்பு ஆணையத்திடம் அறிவிக்க வேண்டும் என்ற அந்த ஆணையத்தின் உத்தரவை பின்பற்றத் தவறியதாக **85** வயதான டாயிம் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால் ஐந்தாண்டு வரையிலான சிறைத்தண்டனை மற்றும் ஒரு லட்சம் வெள்ளி வரையிலான அபராதம் விதிக்க வகை செய்யும் **2009** ஆம் ஆண்டு **எம்.ஏ.சி.சி.** சட்டத்தின் **36(2)** வது பிரிவின் கீழ் அவர் குற்றச்சாட்டை எதிர் நோக்கியுள்ளார்.

### எம்.ஏ.சி.சி.யிடம் டாயிம் அறிவிக்க தவறிய சொத்துக்கள் வருமாறு-

**வங்கிக் கணக்குகள்**

1. அமானா சஹாம் நேஷனல் பெர்ஹாட் (ஏ.எஸ்.பி.)
2. அமானா சஹாம் நேஷனல் (ஏ.எஸ்.என்.)

**வாகனங்கள்**

1. மெர்சிடிஸ் பென்ஸ் 600 எஸ்இஎல்
2. மெர்சிடிஸ் பென்ஸ் 450 எஸ்இஎல்
3. ரோல்ஸ் ரோய்ஸ் 2 எக்ஸ் ரிஜிட் போடி
4. ஆஸ்டின் மோரிஸ் ஆஸ்டிர்

**நிறுவனங்கள்**

1. ஈபு கோத்தா டெவலெப்மெண்ட் சென். பெர்ஹாட்
2. மாயா செனி ஹோல்டிங்ஸ் சென். பெர்ஹாட்
3. மெனரா அம்பாங் சென். பெர்ஹாட்
4. ட்ரிம் க்ருஸ்ஷேர் சென். பெர்ஹாட்
5. லேண்ட்பெல்ட் கார்ப்ரேஷன் சென். பெர்ஹாட்
6. கெனாரி டெலித்தி சென். பெர்ஹாட்
7. எப்.என்.கியு. அட்வான்ஸ் மெட்டிரியல் சென். பெர்ஹாட்
8. கோத்தா தண்டோப் டெவலெப்மேண்ட் சென். பெர்ஹாட்
9. அலுன் அலுன் ரிசோர்ட் (ம) சென் பெர்ஹாட்
10. டாசார் சரோஜா சென். பெர்ஹாட் –
11. ஜைகென்திக் புரேமோஷன்ஸ் சென். பெர்ஹாட்
12. ஜூபிடர் அலையான்ஸ் சென். பெர்ஹாட்
13. இனாயாட் ரியால்டி சென். பெர்ஹாட்
14. சுவாசா உருஸ் சென். பெர்ஹாட்
15. அவிலியன் பெர்ஹாட்
16. மெரிடியன் ஹெவன் சென். பெர்ஹாட்
17. அவிலியன் விஸ்தா ஹோட்டல் சென் பெர்ஹாட்
18. வாஸ்ட் எக்சஸ் சென். பெர்ஹாட்
19. ஃபோர்ச்சுன் வேலி சென். பெர்ஹாட்
20. ரிலாயன்ஸ் ஈ-கோம் சென். பெர்ஹாட்
21. அட்மிரல் மரினா பெர்ஹாட்
22. கோல்டன் என்வோய் (ம) சென். பெர்ஹாட்
23. மேலா லைப்ஸ்டைல் சென் பெர்ஹாட்
24. ஏ.வி.ஐ. ஸ்பா சென். பெர்ஹாட்
25. எவிலியன் ஹோட்டல் குரூப் சென். பெர்ஹாட்
26. ஆர்.பி.பி. கேப்பிட்டல் ஹோல்டிங்ஸ் சென். பெர்ஹாட்
27. ஜீனியஸ் பீல்ட் சென். பெர்ஹாட்
28. பெஸ்திவ் ப்ளேஸ் சென். பெர்ஹாட்
29. அவிலியன் சூட் ஹோட்டல் சென். பெர்ஹாட்
30. தாமான் யூனிக் சென். பெர்ஹாட்
31. அட்மிரல் கோவ் டெவலெப்மெண்ட் சென். பெர்ஹாட்
32. நெஸ்லைன் சென். பெர்ஹாட்
33. ஆர்.பி.பி. டெவெலப்மெண்ட் சென். பெர்ஹாட்
34. அவிலியன் ஹோட்டல் இண்டர்நேஷனல் சென். பெர்ஹாட்
35. அவிலியன் ஹில் ஹோட்டல் (கே.எல்.) சென். பெர்ஹாட்
36. ரிலையான்ஸ் ஷிப்பிங் அண்ட் டிராவல்ஸ் ஏஜென்சி (பேராக்) சென். பெர்ஹாட்

**25 சொத்துகள்**

**கோலாலம்பூர்**

1. ரிட்ச்சி கொண்டோவில் ஒரு வீடு
2. பெரிசியாரான் ரிட்சியில் ஒரு லாட்
3. தாமான் யூ-தாண்ட் சாலையில் ஒரு யூனிட்
4. வங்சா மெலாவாத்தியில் இரு வீடுகள்
5. ஜாலான் கம்போங் பாண்டான் அருகே ஒரு வீடு
6. ஜாலான் கோலாம் ஆயரில் ஒரு வீடு
7. டேசா கூடா லாரியில் ஒரு வீடு
8. பெர்சியாரான ரிட்சியில் ஒரு வீடு
9. சோக்ஃபின் ஹவுஸ்- வைட் பேலஸ்
10. செராஸ், தாமான் மெலுரி அருகே நிலங்கள்
11. சிந்தா கொண்டோமினியம் அருகே வீடுகள்
12. மெனாரா முத்தியாரா பங்சாரில் ஒரு சூட்

**சிலாங்கூர்**

1. அம்பாங் தாமான் டாகாங் அருகே நிலங்கள்
2. மெனாரா அம்பாங்கில் ஒரு லோட் நிலம்
3. புக்கிட் சவுஜானாவில் ஒரு செமி டி இரண்டு மாடி வீடு

**பகாங்**

1. கோத்தோங் ஜெயா, புஞ்சா டானி டானியில் இரு லாட்டுகள்
2. புக்கிட் பிரேசர், ரொம்பின் ஹவுஸ்
3. எவிலியன கேமரன் ஹைலேண்ட்ஸ்

**கெடா**

1. முக்கிம் பூஜாங்கில் இரு லாட் நிலங்கள்

**நெகிரி செம்பிலான்**

1. எவிலியன் போர்ட்டிக்சன்
2. எவிலியன் அட்மிரல் கோவ்
3. எவிலியன் மரினா அண்ட் லெய்ஸர் கிளப்

**பேராக்**

1. ஏவிஜ பங்கோர் பீச் ரிசோர்ட்

# ரஹ்மா ரொக்க உதவித் திட்டத்தின் கீழ் சிலாங்கூர்வாசிகளுக்கு வெ.100 கோடிக்கும் மேல் பகிர்ந்தளிப்பு

**ஷா ஆலம்-**

மக்களின் நலன் காப்பதை நோக்கமாகக் கொண்ட மத்திய அரசின் ரஹ்மா ரொக்க உதவித் திட்டத்தின் **(எஸ்.டி.ஆர்.)** கீழ் 100 **கோடிக்கும்** மேல் சிலாங்கூர் மாநில மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, நடப்பு அரசாங்கம் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சனைகளுக்கு அது தீர்வு கண்டுள்ளது. குறிப்பாக அத்தியாவசியப் பொருள்கள் நியாயமான விலையில் இருப்பதை உறுதி செய்வதில் பெரிதும் உதவியுள்ளது என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

இன்றைய அரசாங்கம் பணியை முறையாக செய்யும் அரசாங்கமாக விளங்குவதை இது காட்டுகிறது என்று தனது அதிகாரப்பூர்வச் சமூக ஊடகத்தில் பதிவேற்றிய காணொளி ஒன்றில் அவர் தெரிவித்தார்.

மாநில அரசு பல மக்கள் நலத் திட்டங்களை அமல்படுத்தியுள்ளதாகக் கூறிய அவர், இல்திஸாம் சேஹாட் சிலாங்கூர், காப்புறுதித் திட்டம் மற்றும் அனைத்து பள்ளிகளுக்கான நிதியுதவி ஆகியவையும் அவற்றில் அடங்கும் என்றார்.

இது தவிர, சிலாங்கூரிலுள்ள அனைத்து சமய வழிபாட்டுத் தலங்களுக்கும் மானியம் வழங்கப்படுகிறது. மேலும் அந்த வழிபாட்டுத் தலங்களுக்கு நிலத்தையும் ஆர்ஜிதம் செய்து தருகிறது. இதன் மூலம் அந்த நிலங்களுக்கு பிரீமியத் தொகையை செலுத்த வேண்டிய அவசியம் இல்லை என அவர் தெரிவித்தார்.

நில பிரீமியத் தொகை விவகாரம் முன்பு ஒரு பிரச்சனையாக இருந்து வந்த காரணத்தால் வழிபாட்டுத் தலங்களை நிர்மாணிக்க இயலாத சூழல் ஏற்பட்டது என்றார் அவர்.

கடந்த **2008ஆம்** ஆண்டில் பதவிக்கு வந்தது முதல் மாநில பொருளாதாரத்தை மக்கள்மயமாக்கும் கருப்பொருளில் ஏழு சமூக நலத் திட்டங்கள் அமல்படுத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அந்த திட்டங்கள் கடந்த **2017ஆம்** ஆண்டில் பெடுலி ராக்யாட் முன்னெடுப்பின் கீழ் 43 திட்டங்களாக அதிகரிக்கப்பட்டன. பின்னர் கடந்த **2019ஆம்** ஆண்டில் அவை ஒருமுகப்படுத்தப்பட்டு 33 திட்டங்களாக ஆயின.

தற்போது இல்திஸாம் சிலாங்கூர் பென்யாயாங் (ஐ.எஸ்.பி.) முன்னெடுப்பின் கீழ் **60 கோடி வெள்ளிக்கும்** மேற்பட்ட தொகையில் **46** சமூக நலத் திட்டங்கள் அமல்படுத்தப்பட்டு வருகின்றன என்று அவர் சொன்னார்.

## 14 லட்சம் இ.பி.எஃப் உறுப்பினர்களுக்கு ஊக்கத் தொகையாக 500 வெள்ளி




**கோலாலம்பூர்-**

ஊழியர் சேம நிதி வாரியத்தில் **(இ.பி.எஃப்.)** உறுப்பியம் பெற்றுள்ள **40** முதல் 55 வயது வரையிலான **14 லட்சம்** பேருக்குக் கூடுதல் சந்தா தொகையாக **70 கோடியே 80 லட்சம் வெள்ளியை** அரசாங்கம் செலுத்தியுள்ளது.

கடந்தாண்டு பிப்ரவரி மாதம் **24**ஆம் தேதி வரையிலான காலக்கட்டத்தில் இ.பி.எஃப். முதலாவது சேமிப்புக் கணக்கில் **10,000 வெள்ளிக்கும்** குறைவான தொகையை வைத்துள்ளவர்களுக்கு ஊக்கத் தொகையை வழங்கும் நோக்கில் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக அந்த வாரியம் கூறியது.

இந்த **500 வெள்ளி** ஊக்கத் தொகை ஒரு முறை மட்டுமே வழங்கப்படும். கடந்தாண்டு பிப்ரவரி **23**ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்ட **2023**ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் இந்த ஊக்கத் தொகை தொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இ.பி.எஃப். சேமிப்பில் குறைவானத் தொகையை வைத்திருக்கும் ஓய்வு வயதை எட்டக்கூடிய உறுப்பினர்கள் தங்களின் சேமிப்பை அதிகரிப்பதற்கு உதவும் நோக்கில் இந்த திட்டத்தை அரசாங்கம் அறிவித்தது.

சேமிப்புத் திறனை அதிகரிப்பதற்கும் நிதி ஆற்றல் மிக்க எதிர்காலத்தை உருவாக்குவதற்கும ஏதுவாக கணிசமான பங்களிப்பை வழங்குவதை உறுதி செய்வதற்கும் இ.பி.எஃப். வகுத்துள்ள இலக்குக்கு ஏற்ப இந்த திட்டம் அமைந்துள்ளது.



## RM200 மதிப்பிலான 450 ஜோம் ஷோப்பிங் வவுச்சர்கள் விநியோகம்

**ஷா ஆலம்-**

அடுத்த வாரம் கொண்டாடப்படும் சீனப் புத்தாண்டை முன்னிட்டு சுங்கை துவா தொகுதியில் வசிப்பவர்களுக்கு **RM200** மதிப்பிலான **450** வவுச்சர்கள் விநியோகிக்கப்பட்டன.

குடிப்பாளர்களின் சுமையைக் குறைக்க தகுதியான பெறுநர்களுக்கு "விழாக்கால பொருட்கள் வாங்கலாம்" என்ற (ஜோம் ஷோப்பிங் பிராயான்) திட்டத்தின் மூலம் வவுச்சர்கள் வழங்கப் படுகின்றன என டத்தோ மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

"இந்த திட்டத்தின் மூலம் ஐடில்பித்ரி, சீன புத்தாண்டு மற்றும் தீபாவளி ஆகிய மூன்று முக்கிய பண்டிகைகளுக்கு ஒவ்வொரு பெறுநருக்கும் **RM200** வவுச்சர் வழங்கப்படுகிறது" என்று அவர் முகநூலில் தெரிவித்தார்.

இந்த ஆண்டு, ஜோம் ஷோப்பிங் ராயா வவுச்சர் திட்டத்திற்கு **RM16.48 மில்லியன்** வழங்கப்பட்டது. அதில் சீனப் புத்தாண்டிற்கு **23,900** வவுச்சர்கள் **82,400** பெறுநர்களுக்கு வழங்கப்பட்டன.

இது மக்களின் நலன் மற்றும் நல்வாழ்வைப் பாதுகாப்பதற்காக நீண்ட கால முயற்சியாகக் குறைந்த வருமானம் பெறும் குழுக்களை இலக்காகக் கொண்ட மாநில அரசாங்கத்தால் அறிமுகப் படுத்தப்பட்ட ஒரு திட்டமாகும்.

## நாட்டில் வர்த்தகக் குற்றங்கள் அதிகரிப்பு ஐந்தாண்டுகளில் வெ.1,400 கோடி இழப்பு

**கோலாலம்பூர்-**

கடந்த ஐந்தாண்டு காலத்தில் வர்த்தக குற்றச் சம்பவங்களின் எண்ணிக்கை 53.2 விழுக்காடு அதிகரித்துள்ளது. இக்காலக்கட்டத்தில் **1,433 கோடி வெள்ளி** இழப்பு ஏற்பட்டுள்ளதாக புக்கிட் அமான் வணிக குற்றப் புலனாய்வுத் துறை இயக்குநர் டத்தோஸ்ரீ ராம்லி முகமது யூசுப் தெரிவித்தார்.

இந்த தொழில்நுட்பத்தின் வளர்ச்சி வணிக குற்றங்களின் அதிகரிப்பில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய குற்றச்சம்பவங்கள் ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகின்றன என்று அவர் நேற்று இங்கு நடைபெற்ற சிறப்பு செய்தியாளர் கூட்டத்தில் தெரிவித்தார்.

கடந்த **2019**ஆம் ஆண்டில் **26,330** மோசடிச் சம்பவங்களில் **6,217 கோடி வெள்ளி** இழப்பு ஏற்பட்டதாகக் கூறிய அவர், **2020**இல் **2,064 கோடி வெள்ளியும் (27,323 சம்பவங்கள்), 2021 2,206 கோடி வெள்ளியும் (31,490 சம்பவங்கள்)**, **2022**இல் **1,733 கோடி வெள்ளியும்**, **(30,536 சம்பவங்கள்) 2023 211 கோடி வெள்ளியும் (40,350 சம்பவங்கள்)** இழப்புகள் பதிவு செய்யப்பட்டன என்றார்.

கடந்த ஐந்து வருடங்களாக புலனாய்வு அதிகாரிகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கும் நிலையில் அதிகரித்துவரும் குற்றச் செயல்களின் எண்ணிக்கை வர்த்தக குற்றப் புலனாய்வுத் துறைக்கு பெரும் சவாலாக இருப்பதாகச் சொன்னார்.

தற்போது **839** விசாரணை அதிகாரிகள் உள்ளனர். தற்போதைய ஆள்பல எண்ணிக்கையின் அடிப்படையில் அளவிடப்பட்டால விசாரணை அதிகாரிகளுக்கும் திறக்கப்பட்ட விசாரணை அறிக்கைகளுக்கும் இடையிலான விகிதம் **1:48** ஆகும் என்றார் அவர்.

Diterbikan oleh **Media Selangor Sdn Bhd** (Sebelumnya dikenali **Communication Sdn Bhd**), Aras 11, Menara Bank Rakat, No1 Jalan Indah 14/8, Seksyen 14, 4000 Shah Alam, Selangor. Dicetak oleh **Ultimate Print Sdn Bhd** Lot 2, Jalan Sepana 15/3, off persiaran Seksyen 15, 40200 Shah Alam, Selangor